வடமராட்சிக்கான
உதயன்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

புதன் பொய்கை

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 81

புதன்கிழமை 15 பெப்ரவரி 2023 | மாசி 03 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 16

# உள்ளூராட்சித் தேர்தல் தள்ளிப்போக வாய்ப்பு!

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 15

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் விவகாரத்தில் சட்டமா அதிபரின் ஒத்துழைப்பு போதுமானதாக அமையவில்லை. வாக்கெடுப்புக்குத் தேவையான பணிகளை உரிய காலத்துக்குள் நிறைவு செய்யாவிட்டால் தேர்தலைப் பிற்போட வேண்டிய நிலை ஏற்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். »15

உள்ளூராட்சித் தேர்தல்

## ஒத்திவைக்கப்பட்டது தபால் வாக்களிப்பு!

கொழும்பு, பெப். 15

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு காலவரையறையின்றி »15

## தேர்தலைப் பிற்போடும் எண்ணம் எமக்கில்லை

அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கொழும்பு, பெப். 15

தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று அமைச்சரவைப் பேச் »15

பளை மருத்துவமனை பொறுப்பதிகாரியாக

## மருத்துவர் சிவரூபன் இன்று பொறுப்பேற்பு!

கிளிநொச்சி, பெப். 15

பளை மருத்துவமனையின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியபோது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, »14

## காணாமற்போன மீனவர் சடலமாக நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம், பெப். 15

கடற்றொழிலுக்குச் சென்று படகு கவிழ்ந்ததில் காணாமற்போன மீனவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பி.ரவிச்சந்திரன் »09

யாழ். மாநகரசபையில்

## ஆர்னோல்டின் பட்ஜெட் நேற்றுத் தோற்கடிப்பு

விரிவு:- பக்.15

## தேர்தலைப் பிற்போடின் போராட்டம் வெடிக்கும்!

அரசுக்கு ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, பெப். 15

மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காகவும், தேர்தலைப் பிற்போடுவதற்கு அரசு மேற்கொள்ளும் நகர்வுகளுக்கு எதிராகவும், தொடர் போராட்டங்களை நடத்துவதற்கு »15






# பிரபாகரன் தொடர்பான கருத்து பழ.நெடுமாறனிடம் விசாரணை

## இந்திய உளவுத்துறை தீவிரம்

கொழும்பு, பெப். 15

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளார் என உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்த கருத்து தொடர்பில் அவரிடம் விசாரணை நடத்த இந்திய மத்திய மாநில உளவுப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. பிரபாகரன் தொடர்பான தகவல்கள் மற்றும் ஆவணங்களும் மீண்டும் திரட்டப்படுகின்றன என்றும் கூறப்படுகிறது.

இறுதிப் போரில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் உயிரிழந்துவிட்டார் என 2009 ஆம் ஆண்டு இலங்கை இராணுவம் அதிகாரபூர்வமாக அறிவித்தது. அவரது புகைப்படத்தையும் வெளியிட்டது. இந்த நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளார் - அவர் விரைவில் வெளிப்படுவார் என பழநெடுமாறன் புதிய தகவலை வெளியிட்டுள்ளார்.

அந்தக் கருத்துக்கமைய பிரபாகரன் பற்றிய தகவல்களை மீண்டும் திரட்ட மத்திய உளவுப் பிரிவு உத்தரவிட்டுள்ளது. பிரபாகரன் தொடர்பாக தகவல்களை தமிழக 'கியூ' பிரிவு பொலிஸாரும் திரட்ட தொடங்கியுள்ளனர்.

பிரபாகரன் இறந்ததாக ஏற்கனவே திரட்டப்பட்ட ஆவணங்களும் தற்போது கையிலெடுக்கப்பட்டு புலனாய்வு நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் பிரபாகரன் குறித்து வெளியிட்ட தகவல் தொடர்பில் பழ.நெடுமாறன் மற்றும் அவரது ஆதரவாளர்களிடம் விசாரணை நடத்தவும் உளவுப் பிரிவினர் முடிவு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# '13' ஐ ஆதரித்தாலும் சமஷ்டிக்கு எதிர்ப்பு!

### லக்ஷ்மன் கிரியல்ல தெரிவிப்பு



கொழும்பு, பெப். 15

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரித்தாலும், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியிலும் சமஷ்டித் தீர்வுக்கு ஒரு போதும் இடமளிக்கப் படமாட்டாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவரும், எதிரணி பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கை அரசமைப்பின் ஓர் அங்கம். அதை ஐக்கிய மக்கள் சக்தி ஆதரிக்கின்றது. அதே போல 13 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பில் சர்ச்சை நிலை காணப்படுகின்றது. அனைவரும் கலந்துரையாடி இவ்விரு அதிகாரங்கள் தொடர்பில் பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் கூட பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பில் இணக்கப்பாடு இல்லையேல் அவற்றை நடைமுறைப்படுத்த முடியாது. 13இல் உள்ள ஏனைய விடயங்கள் வழங்கப்படும். அத்துடன், சமஷ்டித் தீர்வை நாம் ஆதரிக்கமாட்டோம் - என்றார். (எ-14,44)

# தந்தங்களை விற்க முயன்றவர் கைது!

கொழும்பு, பெப். 15

சுமார் 4 அடி உயரம் கொண்ட இரண்டு யானைத் தந்தங்களை 50 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சித்த நபர் கைது செய்யப்பட்டார் என்று பாணந்துறை வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மாத்தறை பிரதேசத்தில் நபரொருவர் ஒரு சோடி யானைத் தந்தங்களை விற்பனை செய்வதற்கு முயல்கின்றார் என்று பாணந்துறை வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகருக்குத் தகவல் கிடைத்துள்ளது. அதனடிப்படையில் பொலிஸ் பரிசோதகர் மகேந்திர பெரேரா தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மாத்தறை பிடபெத்தர பிரதேசத்தில் உள்ள விகாரைக்கு அருகில் வைத்து நபரொருவர் கைது செய்யப்பட்டார். அத்துடன் சந்தேகநபரிடமிருந்து யானைத் தந்தங்களையும் பொலிஸார் கைப்பற்றினர். (எ-14,இ)

# மின்கட்டண உயர்வுக்குமுன் ஒருமித்த தீர்மானம் எடுக்குக

## தேசிய பேரவை வலியுறுத்து

கொழும்பு, பெப்.15

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு முன்னர் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு மற்றும் மின்சார சபை ஆகியவை கூடி கலந்துரையாடல் ஒன்றை நடத்தி ஒருமித்த தீர்மானத்தை எட்டுவது சிறந்தது என தேசிய பேரவை அறிவுறுத்தியுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரின் தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தேசிய பேரவைகூடியது.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு மற்றும் மின்சாரசபையின் அதிகாரிகள் தேசிய பேரவைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

60 வீத கட்டண அதிகரிப்புக்கு அனுமதி வழங்கப்படவில்லையெனில் கடுமையான நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிடுவதுடன் எதிர்வரும் காலங்களில் நிலக்கரி இறக்குமதி செய்வதற்குக்கூட நிதி இல்லாமல் போவதால் நீண்டநேர மின் துண்டிப்புக்கு வழிவகுக்கும் என மின்சாரசபையின் தலைவர் குறிப்பிட்டார்.

மின்சாரக் கட்டணம் அதிகரிப்பது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எதிர்வரும் 15 ஆம் திகதி அறிவிப்பதற்குத் தயார் என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மின்சாரசபையின் தரவுகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினரின் கருத்துக் கணிப்புகள் இதுவரை பெறப்பட்டுள்ளன எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை - பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் தற்பொழுது வெளிநாடு சென்றுள்ளமை கவனத்திற் கொள்ளப்பட்டது.

அதற்கமைய மின்சாரசபை மற்றும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு என்பவற்றின் கருத்துக்களைக் கலந்துரையாடி ஒருமித்த கருத்துக்கு வந்து தீர்மானம் எடுப்பது மிக முக்கியமானது. அவ்வாறில்லையெனில் பொதுமக்கள் கஷ்டத்துக்கு உட்படுவதை தவிர்க்க முடியாது போகும் என சுட்டிக் காட்டிய தேசிய பேரவை விரைவாகக்கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதன் தேவையை வலியுறுத்தியது. (ச-இ)

# ஜி-20 கட்டமைப்பின்கீழ் கடன் கோரும் இலங்கை

கொழும்பு, பெப். 15

இந்தியா, சீனா, சவூதி அரேபியா உள்ளிட்ட 7 நாடுகள் புதிய அரச கடன் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக மெய்நிகர் கூட்டம் ஒன்றில் பங்கேற்கத் தயாராகவுள்ளன. இதில் இலங்கையும் பங்கேற்கவுள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இதற்கான மெய்நிகர் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியன இந்தக் கூட்டத்தை நடத்தவுள்ளதாக ரொய்ட்டர்ஸ் அறிவித்துள்ளது.

மேலும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ள இலங்கை, சம்பியா, மற்றும் கானா ஆகிய நாடுகள் ஜி-20 கட்டமைப்பின் கீழ் கடன் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-14.இ)

# கேபிள் திட்டத்தில் இருந்து விலகிய சீன நிறுவனங்கள்

கொழும்பு, பெப். 15

அமெரிக்காவுடனான பதற்றம் அதிகரித்து வருவதால், இலங்கை உள்ளிட்ட நாடுகளை இணைக்கும் கடலுக்கு அடியிலான 'சீ மீ வீ' 6 (Sea Me We) திட்டத்திலிருந்து இரண்டு சீன நிறுவனங்கள் விலகியுள்ளன.

ஆசியா மத்திய கிழக்கு, மேற்கு ஐரோப்பா நீர்மூழ்கிக் கப்பல் கேபிள் திட்டத்தில் இருந்தே சைனா மொபைல் மற்றும் சைனா ரெலிகொம் ஆகிய சீன நிறுவனங்கள் தங்கள் ஈடுபாட்டை விலக்கிக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

தி பைனான்சியல் டைம்ஸின் கூற்றுப்படி, சீனா மொபைல் மற்றும் சைனா ரெலிகொம் ஆகியவை அமெரிக்காவுடன் அதிகரித்துவரும் புவிசார் அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில் கடந்த ஆண்டு திட்டத்திலிருந்து வெளியேறியுள்ளன.

19 ஆயிரத்து 200 கிலோமீற்றர் கேபிள் திட்டம் கடந்த ஆண்டு முதன்முதலில் அறிவிக்கப்பட்டது. இது சிங்கப்பூர், பிரான்ஸ், இத்தாலி, கிறீஸ், எகிப்து, சவூதிஅரேபியா, ஜிபூட்டி, பாகிஸ்தான், இந்தியா, மாலைதீவுகள், இலங்கை, பங்களாதேஷ் மற்றும் மலேசியாவை இணைக்கும் வகையில் அமைக்கப்படுகிறது.

இந்தத் துறையில் சீனாவின் மிகப்பெரிய ஃபைபர் கேபிள் வழங்குநரான ஹெங்டாங் மரைனைவிட, அமெரிக்க நிறுவனமான சப்கொம்முக்கு கேபிளை உருவாக்குவதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டமையே, சீன நிறுவனங்களின் விலகலுக்கான காரணம் என்று கூறப்படுகிறது.

இதேவேளை - 2021 ஆம் ஆண்டில் சீன நிறுவனங்கள் பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக அமெரிக்க அரசாங்கம் எச்சரித்ததைத் தொடர்ந்து, பசுபிக்தீவு நாடுகளை இணைக்கும் ஒரு துணைக்கடல் கேபிள் அகற்றப்பட்டது. (எ-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூ. 19 பில்லியன் ஒதுக்கீட்டில் மக்களுக்கு நிவாரணங்கள்

*அமைச்சரவையில் தீர்மானம்*

கொழும்பு, பெப்.15

பொருளாதார முன்னேற்றத்துடன் 19 பில்லியன் நிதி ஒதுக்கீட்டில் நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளது.

நெல் கொள்வனவு உள்ளிட்ட 3 நடவடிக்கைகளின் கீழ் மக்களுக்கு நிவாரணம் வழங்க அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்றுமுன்தினம் அமைச்சரவை கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 19 பில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

அதன்பிரகாரம் சிறுவர் மந்தபோசணையை இல்லாதொழித்தல், கர்ப்பிணி தாய்மாரின் போஷாக்கை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் மற்றும் பணித்தொகை செலுத்தப்படாத 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு அதனைச் செலுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சரொருவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# தேர்தலுக்கு பணமில்லை அரசு கூறுவது சூழ்ச்சியே

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, பெப். 15

உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போடுவதற்கு பல்வேறு திட்டங்களை மேற்கொள்ள முனைந்த அரசாங்கம் தற்போது தேர்தலுக்கு பணம் கொடுக்காமல் இழுத்தடிப்பதை கையிலெடுத்துள்ளது – இவ்வாறு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பரப்புரைக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் இது வரைக்கும் 21 தடவைகள் முயற்சித்துள்ளது. அவை எதுவும் கைகூடவில்லை. இந்நிலையில் தேர்தலை நடத்துவதற்குப் பணம் கொடுக்காமல் இருப்பதற்கு முயற்சிக்கின்றது. தேர்தல் நடவடிக்கைகளுக்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கும் செலவுகளை நிறுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது. அமைச்சுக்களின் செயலாளர்கள், அரசமைப்பில் விதிக்கப்பட்டிருக்கும் கட்டளைகளை பின்பற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளனர். இந்த சதித்திட்டத்தை நிதியமைச்சின் செயலாளர் கவனத்திற் கொள்ளவேண்டும்.

அரசாங்கம் அண்மைக்காலத்தில் மேற்கொண்ட கொண்டாட்டங்கள் மற்றும் அரசாங்கத்தின் வருமானங்களின் பிரகாரம் இந்தச் செலவானது ஒரு நாளுக்குரிய வருமானமாகும்.

அரசாங்கம் விதித்த புதிய வரிக் கொள்கையின் மூலம் 10 தேர்தல்களை நடத்துவதற்கு முடியும் - என்றார். (ச-இ)

## இந்தியாவிலிருந்து முட்டை இறக்குமதி

*அமைச்சரவை அனுமதி*

கொழும்பு, பெப்.15

இந்தியாவிலிருந்து முட்டைகளை இரண்டு மாத காலத்துக்கு இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது. நேற்று முன்தினம் கூடிய அமைச்சரவை இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

முட்டையின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அண்மைக்காலமாக இந்தியாவில் பறவைக் காய்ச்சல் பரவி வருவதால் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் அனுமதி கட்டாயம் என வலியுறுத்தப்பட்டது.

இந்தநிலையில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தால் பறவைக் காய்ச்சல் இல்லை என பரிந்துரை வழங்கப்பட்டமைக்கமைய இந்த அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது என அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். இரண்டு மாதங்களுக்குத் தேவையான முட்டைகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தேர்தல் பிற்போடப்படின் எதிர்க்கட்சிகள் திரளும்!

## அரசுக்கு சஜித் பிரேமதாஸ எச்சரிப்பு

கொழும்பு, பெப்.15

மக்களின் ஜனநாயக உரிமைகளை கடுமையாக மீறும் வகையில் தேர்தலை ஒத்திவைப்பது அல்லது நடத்தாது விடுவது அரசாங்கத்தின் கோழைத்தனமான வெளிப்பாடே. இதற்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து போர்க்கொடி தூக்கும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தபால் வாக்குச்சீட்டை அடிச்சக்க பணம் ஒதுக்க இழுத்தடிப்புச் செய்வதனூடாக மக்களின் இறையாண்மையை கொள்ளையடிக்கும் அரசின் புதிய நாடகம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

மக்கள் ஆணையற்ற அரசாங்கம் தேர்தலை நடத்த பயந்துபோயுள்ளது. தேர்தலை ஒத்திவைக்கும் சதிகள் இன்னும் முடிந்தபாடில்லை.



தேர்தலை ஒத்திவைப்பதற்கான அரசாங்கத்தின் கூட்டுச் சதிகள் சட்டத்தின் முன் தோற்கடிக்கப்பட்டு வருகின்றன. அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் தேர்தலை நடத்தாது விடுவதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை.

மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் வகையில் தேர்தலை ஒத்திவைப்பது கோழைத்தனம். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக எதிர்க் கட்சிகளின் அனைத்துச் சக்திகளும் ஏனைய முற்போக்கு சக்திகளும் ஒன்று திரண்டு போராடும் - என்றார். (ச-இ)

## பிளாஸ்ரிக், பொலித்தீன் இறக்குமதிக்கு தடை

கொழும்பு, பெப். 15

ஒருமுறை மாத்திரம் பயன்படுத்தி அகற்றப்படும் 7 பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருள்களை நாட்டுக்குள் உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் இறக்குமதி செய்தல் போன்றவற்றை தடைசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சர் அமைச்சரவைக்கு முன்வைத்த கோரிக்கைக்கு அனுமதி கிடைத்துள்ளதைத் தொடர்ந்து எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதிமுதல் இந்த தடை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஒருமுறை மாத்திரம் பயன்படுத்துகின்ற பானம் அருந்தும் பிளாஸ்ரிக் ஸ்ரோ மற்றும் கலக்கும் உபகரணங்கள், பிளாஸ்ரிக் மூலம் தயாரிக்கப்படும் யோகட் கரண்டி உள்ளிட்ட ஒருமுறை பயன்படுத்தி அகற்றப்படும் பீங்கான், கோப்பை (யோகட் கப் தவிர்ந்த), கரண்டிகள், முள்ளுக் கரண்டிகள் மற்றும் கத்திகள், பிளாஸ்ரிக் மாலைகள், பிளாஸ்ரிக் மூலம் தயாரிக்கப்பட்ட இடியப்பத் தட்டுகள் என்பன இவ்வாறு தடைசெய்யப்படவுள்ளன. (எ-14.இ)

# புதிய மதுவரிச் சட்டத்துக்கான வரைவைத் தயாரிக்க அனுமதி

கொழும்பு, பெப். 15

புதிய மதுவரிச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான சட்டவரைவை தயாரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மதுசாரம் மற்றும் புகையிலைப் பாவனை, அதனுடன் தொடர்புடைய வர்த்தகங்களை ஒழுங்குபடுத்துதல், உரிமப்பத்திரங்களை வழங்குதல், வரி விதிப்பனவுகள் தொடர்பான மதுவரிக் கட்டளைச் சட்டம் மற்றும் புகையிலை வரிச் சட்டம் ஆகியவற்றுக்குப் பதிலாக புதிய மதுவரிச் சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான முன்மொழிவு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால், கடந்த 2022 ஆம் ஆண்டுக்கான இடைக்கால பாதீட்டின் மூலம் நடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

புதிய மதுவரிச் சட்டத்துக்கு, சட்ட வரைவொன்றை தயாரிக்க வேண்டும் என்று சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-14.இ)

## நிலக்கரி கப்பல் கட்டணத்தை செலுத்துவதற்கு பணமில்லை

கொழும்பு, பெப்.15

நாட்டை வந்தடைந்துள்ள நிலக்கரி கப்பல்களுக்கான கட்டணத்தை செலுத்தமுடியவில்லை என இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் ஷேஹான் சுமனசேகர குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நாட்டை வந்தடைந்த 2 கப்பல்களுக்கே கட்டணம் செலுத்த முடியவில்லை. நிலக்கரி கொள்வனவுக்காக இலங்கை மின்சாரசபை ஒரு தொகை பணத்தை வழங்கியது. ஆயினும் அந்தப் பணம் போதுமானதாக இல்லை.

எதிர்வரும் நாட்களில் மிகவும் சிக்கலான சூழ்நிலையை நாம் சந்திக்கவேண்டியுள்ளது. இதே வேளை - இந்த இரு கப்பல்களுக்கு முன்னர் நாட்டை வந்தடைந்த கப்பலொன்றிலிருந்தே நிலக்கரி தரையிறக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகிறன என அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலபோக நெல் கொள்வனவுக்கு திறைசேரியால் நிதி விடுவிப்பு

- 100 ரூபாவுக்கு கொள்வனவு
- மாவட்டச் செயலர்களூடாக முன்னெடுப்பு

கொழும்பு, பெப்.15
பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நாட்டரிசி வகை நெல்லை மாத்திரம் கொள்வனவு செய்வதற்கான நிதி இந்த வாரம் முதல் திறைசேரியிலிருந்து விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நெல் கொள்வனவு நடவடிக்கை அந்தந்த மாவட்ட செயலர்கள் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.

நெல் கொள்வனவு மற்றும் நெல் கையிருப்பை விநியோகிக்கும் வேலைத்திட்டம் தொடர்பான சுற்றறிக்கை நேற்று திறைசேரியால் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் திறைசேரி செயலாளரால் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

அந்தச் சுற்றறிக்கையில் உள்ள தாவது:-

பெரும்போகத்தில் விவசாயிகளுக்கு நெல் அறுவடைக்கு நியாயமான விலையை வழங்குவதும் தற்போதைய கடினமான பொருளாதார நிலைவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பெரும்போக நெல் கொள்வனவு செய்யும் திட்டத்தின் கீழ், சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மாவட்டச் செயலாளர்களால் நாட்டரிசி வகை நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்படவுள்ளது.

நெல் கொள்முதல் நடவடிக்கையின்போது நெல்லை கையேற்பது- களஞ்சியப்படுத்துவது- ஆவணங்களைப் பேணுவது- கணக்குகளை மேற்கொள்ளல் ஆகிய பொறுப்புகள் மாவட்டச் செயலர்கள் மற்றும் அந்தந்த பிரதேச செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பயிரிடப்பட்ட நிலப்பரப்புக்கமைய விவசாயி ஒருவரிடமிருந்து அதிக பட்சமாக ஒரு ஏக்கருக்கு 2 ஆயிரம் கிலோவும், 12 ஏக்கர் வரை 4 ஆயிரம் கிலோவும் 2 ஏக்கருக்கு மேல் 5 ஆயிரம் கிலோவும் நெல் கொள்வனவு செய்யப்படும்.

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நெல் கொள்முதல் திட்டத்தை ஆரம்பிக்கத் தேவையான நிதி குறித்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களால் திறைசேரி அபிவிருத்தி நிதித் திணைக்களத்துக்கு அறிவிக்கப்படவேண்டும்.

அபிவிருத்தி நிதித் திணைக்களம் நேரடியாக மாவட்டச் செயலாளர்களுக்கு திறைசேரி நிதியை ஒதுக்க, தேசிய வரவு -செலவுத் திணைக்களத்துக்குத் தேவையான முற்பணத்தை வழங்க தேவைக்கேற்ப திறைசேரியால் நிதி விடுவிக்கப்படும்.

விவசாயிகளின் பெயரில் வழங்கப்பட்ட கட்டண சான்றிதழை இலங்கை வங்கி, மக்கள் வங்கி அல்லது பிரதேச அபிவிருத்தி வங்கிக் கிளையில் சமர்ப்பிக்கும் போது விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பணம் இடப்படும். இதனை அனைத்து மாவட்டச் செயலர்களும் உறுதிப்படுத்துதல் அவசியம்.

கொள்வனவு செய்யப்படும் நெல் கையிருப்பு உடனடியாக அரிசியாக மாற்றப்பட்டு எதிர்வரும் மாதங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மாதமொன்றுக்கு 10 கிலோ வீதம் இரண்டு மாத காலத்துக்கு வழங்கப்படவுள்ளது- என்றுள்ளது. (ச-இ)

# சிறப்பு சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், பெப்.15
மகா சிவராத்திரியை முன்னிட்டு, ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் திருப்பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தான் தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோயிலில் சிறப்புச்சொற்பொழிவு எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆலய பிரதான மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் செ.த.குமரன் 'சிவராத்திரி விரத மகிமை' என்னும் தொனிப்பொருளில் ஆற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ய)

✦ ✦ ✦ ✦

யாழ்ப்பாணம், பெப்.15
மகா சிவராத்திரியை முன்னிட்டு, புன்னாலைக்கட்டுவன் திடற்புலம் அருள்மிகு ஸ்ரீ நரசிங்க வைரவர் தேவஸ்தானத்தில் சிறப்புச்சொற்பொழிவு எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை 9 மணிக்கு ஆலய பிரதான மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவினைச் சைவப்புலவர் ச. நவநீதன் 'சிவராத்திரி மகிமை' என்னும் தொனிப்பொருளில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். அத்துடன் சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ய)

✦ ✦ ✦ ✦

யாழ்ப்பாணம், பெப்.15
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சிறப்புச் சொற்பொழிவை இளம்சைவப்புலவர் ச. நவநீதன் 'மணிவாசகர் காட்டிய சைவவாழ்வியல்' என்னும் தொனிப்பொருளில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ய)

✦ ✦ ✦ ✦

யாழ்ப்பாணம், பெப்.15
மகா சிவராத்திரியை முன்னிட்டு, அச்செழு வடக்கு நீர்வேலி அருள்மிகு வல்லியப்பர் சிவன் தேவஸ்தானத்தில் சிறப்புச்சொற்பொழிவு எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

சிறப்புச் சொற்பொழிவை இளம்சைவப்புலவர் ச.நவநீதன் 'சிவ விரதங்களில் சிவராத்திரி' என்னும் தொனிப்பொருளில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் சுழிபுரம் அம்பாள் வில்லிசைக்குழுவினர் வழங்கும் 'சத்தியவான் சாவித்திரி' வில்லிசையும் ஊரெழு காணலய நுண் கலையக மாணவர்களின் இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. (ய)

✦ ✦ ✦ ✦


யாழ்ப்பாணம், பெப்.15
மகா சிவராத்திரியை முன்னிட்டு, குப்பிழான் சொக்கவளவு அருள்மிகு அங்கயற்கண்ணி உடனாய திருவாலவாயர் திருக்கோயிலில் சிறப்புச்சொற்பொழிவு எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை 8 மணிக்கு ஆலய பிரதான மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. சொற்பொழிவை இளம்சைவப்புலவர் க. கைலவாசன் 'சிவனுக்கு உகந்தது சிவராத்திரி' என்னும் தொனிப்பொருளில் ஆற்றவுள்ளார். அத்துடன் சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ய)

# வெற்றுச் சோடா போத்தல்களை அடித்து நொருக்கிய விஷமிகள்

சாவகச்சேரி, பெப். 15
எழுதுமட்டுவாழ் சந்திக்கு அருகாமையில் கடைக்கு முன்னால் இருந்த வெற்றுச் சோடா போத்தல்கள் இனந்தெரியாத விஷமிகளால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

எழுதுமட்டுவாழ் சந்தியில் மூன்று கடைகளுக்கு முன்பாக இருந்த வெற்றுச் சோடா போத்தல்களை கடைக்கு முன்னால் வைத்து உடைக்கப்பட்டுள்ளது என்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்கமைய கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர், (எ-14.159)



# வெங்காயப்பூ விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 15
யாழில் வெங்காயப்பூவின் விலை வீழ்ச்சியால் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் அதிகமான விவசாயிகள் வெங்காயப்பூ செய்கையில் ஈடுபட்டனர். வெங்காயப்பூ அறுவடை செய்யப்பட்டு சந்தைகளுக்கு சந்தைப்படுத்துவதால் விற்பனை இன்றித் தேங்கிக் காணப்படுகின்றன, தற்போது ஒரு கிலோ வெங்காயப்பூ 60 ரூபா முதல் 100 ரூபா வரை விற்கப்படுகின்றது. சிலர் அவற்றை கால்நடைகளுக்கும் பயன்படுத்தி வருகின்றனர் என செய்கையாளர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (எ-14,17)

# சின்ன வெங்காயம் அறுவடை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 15
யாழ் நகரில் சின்ன வெங்காயம் அறுவடை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த போகத்தில் 300 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் சின்ன வெங்காயம் பயிரிடப்பட்டது.

ஆரம்பத்தில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட செய்கையாளர்கள் அவற்றை அறுவடை செய்து வருகின்றனர். அறுவடை செய்யும் சின்ன வெங்காயம் சந்தைகளுக்கு விற்பனைக்காக வந்து சேர்வதால் அவற்றின் விலை திடீரென சரிந்துள்ளன. திருநெல்வேலி சந்தையில் ஒருகிலோ சின்னவெங்காயம் 300 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது குறிப்பிடத்தக்கது. (எ-14,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுக்கு நோபலா? ஒஸ்காரா?

விலாங்குமீன்களின் தத்துவம் உலகப்பிரசித்திபெற்றது. இந்த மீன்கள் பொதுவாக மறைந்தே வாழ்பவை. விலாங்கு மீன்களின் தலை மீனைப் போன்றதாகவும், வால் பாம்பைப் போன்றதாகவும் இருக்கும். அவை ஏதேனும் இடத்தில் மறைந்து இருக்கின்ற சமயத்தில் பாம்பு வந்தால் வெளியில் வாலை மட்டும் நீட்டும். இதைப் பார்த்த பாம்பு தனது இனத்தைச் சேர்ந்த ஒன்றுதான் அங்கு உள்ளது என்றுவிட்டுச் சென்றுவிடும். மீன் வந்தால் தலையைக்காட்டும், வந்த மீன் தனது இனத்தைச் சேர்ந்த ஒன்றுதான் உள்ளது என்று உள்ளே சென்றால் மீனின் கதை முடிந்துவிடும். ஆக, விலாங்குகளை நம்பினால் இரையாவதைத் தவிர வேறு வழியில்லை. இதே நிலைதான் இப்போது இலங்கைக்கும். அந்த விலாங்கு வேறு யாருமல்லர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையம் அண்மையில் அமைக்கப்பட்டு கொழும்பிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் கலந்துகொண்டார். அங்கு உரையாற்றுகையில் தமிழர்களின் பாரம்பரியத்தையும் அவர்களின் வரலாற்றுச் சிறப்பையும் தமிழ்த் தலைமைகளின் ஆளுமையையும் ரணில் முரசறையத் தவறவில்லை. 'இலங்கையின் சுதந்திரத்துக்கு தமிழர்கள் அளப்பெரும் சேவைகளை ஆற்றியுள்ளனர். ஆறுமுக நாவலரின் காலம்தொடக்கம் தமிழர்களின் சேவை பரந்து விரிகின்றது. ஆறுமுக நாவலர் பிரித்தானியர்களுக்கு எதிராகப் போராடியதைப் பார்த்துத்தான் பௌத்த பிக்குகளும் போராட்டத்தில் இறங்கினர். இலங்கையச் செதுக்குவதில் சேர் பொன். இராமநாதனின் பங்களிப்பு மகத்தானது' என்பதாக அமைந்திருந்தது ரணிலின் உரை. ஆனால், அவர் இந்தக் கருத்துகளை பேரினவாதிகளுக்குச் சொல்லாமல் தமிழர்களுக்கு ஏன் சொல்கிறார் என்பதுதான் புரியவில்லை.


சேர் பொன். இராமநாதனைப் பற்றி தமிழர்கள் அறியாதவர்கள் அல்லர். சேர் பொன். இராமநாதன் சிங்கள – முஸ்லிம் கலவரத்தின்போது ஆற்றிய பணிகள், பிரிட்டனுக்குச் சென்று சிங்களத் தலைவர்களை சிறைமீட்டமை, பௌத்த மடாலய சட்டத்தை நிறைவேற்றியமை உள்ளிட்ட பௌத்தத்துக்கு ஆற்றிய பணிகள் என்று அவரின் அருமை பெருமைகளை ரணிலைவிடவும் தமிழர்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கின்றார்கள். ஏனெனில், இராமநாதன் என்பவர் தமிழர்களின் தலைமகன். ஆனால், இந்தப் பெருமைகளை, உண்மைகளை ரணில் தென்னிலங்கையிலும், 13ஆவது திருத்தத்துக்காக அவரைத் தற்போது கடுமையாக எதிர்த்துக் கொண்டிருக்கும் நாட்டின் பௌத்த பீடாதிபதிகளிடமும் தெரிவிப்பாரா? இதைப் பரப்புரையாக முன்னெடுப்பாரா? என்ற கேள்வி இங்கே எழுப்பப்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.

இலங்கையின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட ஓர் இனம், சிங்களத் தலைவர்களை சிறைமீட்ட ஓர் இனம் இன்று தன் சுதந்திரத்தை, அரசியலை, தன்னைத்தானே ஆள்கின்ற அபிலாஷையை இழந்து ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதே: இதற்கு ஜனாதிபதி ரணில் என்ன பதிலைத் தரப்போகின்றார்? ஆரம்பத்தில் 'என்ன எதிர்ப்பு வந்தாலும் சமஷ்டியை நிறைவேற்றுவேன்' என்று தெரிவித்த ஜனாதிபதி, அதற்கு வந்த கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து ' 13 தான் தருவேன் 'என்றார். 13க்கும் தற்போது பௌத்த பீடங்கள் எதிர்ப்பைப் பதிவுசெய்ததைத் தொடர்ந்து 'பொலிஸ், காணி அதிகாரங்கள் பகிரப்படாது' என்று தெரிவிக்கின்றார். ஆக, ரணில் யாழ்ப்பாணக் கலாசார நிலையத் திறப்பு விழாவில் ஆற்றிய உரைக்கும் அவரின் செயற்பாடுகளுக்கும் கிஞ்சித்தேனும் தொடர்புள்ளதா?

பௌத்த பீடங்களுக்கும் இதர சிங்களத் தலைவர்களுக்கும் ஒரு தோற்றத்தையும், தமிழ் மக்களிடத்தில் இன்னொரு தோற்றத்தையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் ரணில், இந்த விலாங்கு மீன் ஆட்டத்தைக் கைவிட்டு நேர்படப்பேசி, தீர்வை நோக்கிப் பயணிப்பாராயின் அடுத்த நோபலை அவருக்குக் கொடுத்தாலும் அதில் தப்பில்லை. ஆனால், இந்த மகா நடிகர்களின் பயணம் ஒஸ்காரை நோக்கியதாகவல்லவா இருக்கின்றது.

## நாளொரு நல்வார்த்தை

"உண்மையான நம்பிக்கை வேகமுள்ளது. குருவியைவிட அது வேகமாய்ப் பறக்கும். அரசர்களை அது தேவர்களாக்கும். சாதாரணமானவர்களை அரசர்களாக்கும்" – ஷேக்ஸ்பியர்



# தீவிரமாகும் மருத்துவ நெருக்கடி நோயாளர்கள் இறக்கும் அபாயம்!

*கவனவீனமாகச் செயற்படும் அரசு; மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு*

கொழும்பு, பெப். 15

நாளுக்குநாள் உக்கிரமடையும் மருந்துத் தட்டுப்பாட்டால் நோயாளர்கள் அவதியுறும் நிலையில் சத்திரசிகிச்சை உபகரணங்கள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களுக்கும் கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் நோயாளர்கள் உயிரிழக்கும் அபாயநிலை தோன்றியுள்ளது.

இவ்வாறு அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் மருத்துவர் நிஸாந்த சமரசிங்க தெரிவித்ததாவது:-

நாடளாவியரீதியில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சுகாதார சேவைகளை பராமரிப்பது பெரும் சவாலாக உள்ளது.

ஆயிரத்து 300 வகையான மருந்துப்பொருள்கள் கையிருப்பில் இருக்கும் நிலையில், 140க்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்து வகைகளின் கையிருப்பு தீர்ந்துபோயுள்ளது. நீரிழிவு நோயாளிகளுக்கு வழங்கப்படும் இன்சுலின், இருதய நோயாளிகளுக்கான ஆஸ்பிரின் மருந்து வகைகள், மெட்பார்மின் மருந்து வகைகள், சிறு குழந்தைகளுக்கான சிரப் வகைகள், வலி நிவாரணி மருந்துகள், மயக்க மருந்துகள், புற்றுநோய் மருந்துகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான மருந்துகள் எனப்பலவகைகளுக்குத்தட்டுப்பாடுநிலவுகிறது.

இந்தநிலையில் சத்திரசிகிச்சை உபகரணங்கள் உள்ளிட்ட பல மருத்துவ உபகரணங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மூக்கு வழியாக செலுத்தும் குழாய்கள், சிறுநீர் குழாய்கள், இரத்தத்தினை பெற்றுக்கொள்வதற்கான குழாய்கள் போன்றவற்றுக்கும் கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால் நோயாளர்கள் இறக்கும் அபாய நிலை தோன்றுகிறது. ஆயினும் அரசாங்கம் இதுதொடர்பில் காத்திரமான நடவடிக்கையை எடுக்காது குறைந்தபட்ச தலையீட்டை மேற்கொள்கின்றது.

சுகாதார அமைச்சுக்காக 322 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது எனக் கூறுவது பயனற்றது. ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி உடனடியாகத் தேவைப்படுகின்ற அத்தியாவசிய மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச-இ)

## சுகாதார சேவையின் எரிபொருள் விநியோகத்துக்கு ஜப்பானால் 38 பில். டொலர்

அத்தியாவசிய மற்றும் அவசரகால சுகாதார சேவைகளைத் தடையின்றிபேண எரிபொருள் விநியோகத்துக்கென 38 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதற்கு ஜப்பானிய அரசாங்கம் முன்வந்துள்ளது. அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகசந்திப்பில் அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்; இலங்கையின் தற்போது நிலவும் பொருளாதார நிலைமையில் சுகாதாரத்துறை பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளது.

இந்தநிலையில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அத்தியாவசிய மற்றும் அவசரகால சுகாதார சேவைகளைத் தடையின்றி இயங்குவதற்கான எரிபொருளை பிரதானமாக டீசலை வழங்குவதற்கு இந்த மானியம் ஜப்பான் அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது என அவர் குறிப்பிட்டார். (ச-இ)

நாளை

16.02.2023
வியாழக்கிழமை
மாசி 04

சுபநேரம் : 08.03 - 09.33
ராகுகாலம் : 02.03 - 03.33
ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி

# கடந்த இரு வாரங்களில் மட்டும் பெருமளவு சொத்துக்கள் நாசம்!

### காரைநகர் மீனவர்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 15

காரைநகர், கற்கோவளம் கடற்பரப்பில் கடந்த இரு வாரங்களுக்குள் இந்திய இழுவைமடிப் படகுகளால் 11 லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் உள்ளிட்ட மீனவர்களின் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன என்று காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.ராஜசந்திரன் உதயனுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்றுமுன் தினம் ஞாயிற்றுகிழமை இரவு எங்களுடைய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 52 மீனவர்கள் 30 படகுகளில் தொழில் நிமித்தம் கற்கோவளம் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவ்வேளையில் இன்று (நேற்று) திங்கட்கிழமை அதிகாலை 3 மணியளவில் 100 க்கும் மேற்பட்ட இழுவைமடி இந்தியப் படகுகள் வருகை தந்து தொழிலை மேற்கொள்ள விடாது அடாத்தான நிலையில் அத்துமீறிச் செயற்பட்டன. எமது வலைகள் அறுத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளன. கடந்தவாரமும் இவ்வாறான செயற்பாடு பதிவான நிலையில் இதுவரை சுமார் 11 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்துள்ளன.

மேலும் மீனவர்கள் அதிகளவான மீன்களைப் பிடிக்கக்கூடிய காலமாக இது காணப்படுகின்ற நிலையில் மீண்டும் இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறாத வகையில் கடற்படை அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்ட எமது மீனவர்களுக்கு உரிய நிவாரணம் விரைவில் வழங்கப்பட வேண்டும் - என்றார். (ம-14,125)

## உள்ளூராட்சித் தேர்தலில் விருப்பு வாக்கு இல்லை

கொழும்பு, பெப். 15

மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுள்ள சகல வாக்காளர்கள் மற்றும் அஞ்சல் மூல வாக்காளர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவித்தலில் உள்ளதாவது:-

ஒவ்வொரு வாக்காளரும் ஒரு வாக்கை அளிப்பதற்கு மாத்திரமே தகுதியுடையவர். வாக்குச் சீட்டில் வேட்பாளர்களின் பெயர்கள் அல்லது தேர்தல் தொகுதிகளின் பெயர்கள் மற்றும் எண் குறிப்பிடப்படவில்லை. வாக்களிக்கப்பட வேண்டிய பகுதியில் மாத்திரம் புள்ளடியிடவேண்டும் - என்றுள்ளது. (ம)



யாழ். மாவட்ட சிவன் ஆன்மீகசபையின் ஏற்பாட்டில் மகாசிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீச்சர பாதயாத்திரை செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. (ம)

## அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள்

சாவகச்சேரி, பெப். 15

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட அனைத்து வர்த்தக நிலையங்கள் மற்றும் வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் அளவை, நிறுவைக் கருவிகளுக்கு 2023 ஆம் ஆண்டுக்கான முத்திரையிடும் பணிகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் இடம்பெறவுள்ளன.

யாழ். மாவட்டச் செயலக அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவால் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை அளவை, நிறுவைக் கருவிகளுக்கு முத்திரையிடப்படுமெனவும் சபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள், தொழில் நிலையங்கள் மற்றும் சந்தை வியாபாரிகள் போன்றோர் தமது அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடுமாறு சபையின் செயலாளர் அ.சீராளன் அறிவித்துள்ளார். (ம-14,9)



அகில இலங்கை சைவ மகா சபையினரால் வருடா வருடம் வழங்கப்பட்டு வரும் 'அன்பே சிவம்' விருது இம்முறை அறப்பணியாளரும், வவுனியா கோவிற்குளம் சிவன் கோவில் தர்ம கர்த்தாவும், அருளகம் சிறார்கள் இல்லம், சிவன் முதியோர் இல்லம், சிவன் கோசாலை ஆகியவற்றின் நிறுவு நருமான சிவத் ஆ.நவரட்ணராசா வுக்கு வழங்கப்பட்டது. (ம-125)

## 3 நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 15

கவிஞர் சோ.பத்மநாதனின் மூன்று நூல்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வெளியிடப்படவுள்ளன.

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'நரகொடு சுவர்க்கம்' ஆங்கிலத்திலும், தெலுங்குக் கவிஞர் கோபியின் குறுங்கவிதைகள் தமிழிலும், சோ.பத்மநாதனின் ஆங்கிலக்கவிதைத் தொகுப்புமே இவ்வாறு வெளியிடப்படவுள்ளன.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஆய்வுரைகளை கலாநிதி ம.திருவரங்கன், கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், பேராசிரியர் சி.சிவலிங்கராசா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ம-14)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் வேண்டாம்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர் பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில்ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மிதுனம்** : ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். செலவுகள் ஏற்படக்கூடும். பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை தொடங்குவது நல்லது.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்து விடுவீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்ய வேண்டி வரும்.

**விருச்சிகம்** : புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாய்மாமன் வழியில் வீண் பிரச்சினைகளும் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு. மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அதிகரிக்கும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்குமேல் உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை





"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. -வள்ளுவர்




நிலாந்தன், யாழ்ப்பாணம்.

# "டயஸ்பொறா தூவானத்தைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும்"

தேசம் என்பது அரசறிவியல் அகராதிகளின்படி ஒரு பெரிய மக்கள் திரள். ஒரு மக்கள் கூட்டத்தைப் பெருந்திரளாக கூட்டிக் கட்டுவதைத்தான் தேசிய அரசியல் என்று அழைக்கிறோம். ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் அம்சங்கள் வருமாறு...

இனம், மொழி, நிலம் (அதாவது பாரம்பரியத் தாயகம்), பொதுப் பண்பாடு, பொதுப் பொருளாதாரம்... இவை ஐந்துந்தான் ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனைகின்றன.

> **"போர்க்காலத்தில் புலம்பெயர்ந்து போன ஒருவர் தன் பிள்ளைகளோடு ஊருக்குத் திரும்பி வருகிறார். தாயகத்தைப் பிரிந்த ஏக்கம், குற்றவுணர்ச்சி என்பவற்றின் கலப்பாக அவர் காணப்படுகிறார். தாயகத்தை அவர் எப்படிப் பார்க்கிறார்; தாயகத்தில் உள்ள அவருடைய நண்பர்கள் எவ்வாறு தமது வாழ்க்கையை வியாக்கியானப்படுத்துகிறார்கள் போன்ற எல்லாவற்றையும் திரைப்படம் கூறமுன்வருகிறது."**




ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை ஒடுக்குமுறையும் அவர்களை ஒரு தேசமாகத் தொடர்ந்தும் திரட்டுகிறது.

இவ்வாறு ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் பிரதான அம்சங்களைப் பலப்படுத்தும் எந்த ஒரு கலைச் சொற்பாடும் தேசியத்தன்மை மிக்கதுதான். இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்து "தூவானம்" திரைப்படத்தைப் பார்க்க வேண்டும்.

மருத்துவ நிபுணர் சிவன்சுதனின் தயாரிப்பில், நாடகப் புலமையாளர் கலாநிதி ரதிதரன் திரைப்படத்தை இயக்கியிருக்கிறார். இசைவாணர் கண்ணரும் அவருடைய இரண்டு பிள்ளைகளும் இசையமைத்துள்ளார்கள்.

ஈழத் திரைப்படத் துறையில் மருத்துவர்கள் இறங்குவது இதுதான் முதல் தடவை அல்ல. ஏற்கனவே வரதராஜன், ஜெயமோகன் என்ற இரண்டு மருத்துவர்கள் படங்களைத் தயாரித்திருக்கிறார்கள். வரதராஜன் ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் யுத்தகளத்தில் நின்றவர். அவர் தயாரித்த படம் "பொய்யா விளக்கு". ஜெயமோகன் புலம்பெயர்ந்து வாழ்கிறார். அவர் தயாரித்த படம் "பொய் மான்". இப்பொழுது சிவன் சுதன் தூவானம் படத்தோடு அரங்கில் இறங்கியிருக்கிறார் போர்க்காலத்தில் புலம்பெயர்ந்து போன ஒருவர் தன் பிள்ளைகளோடு ஊருக்குத் திரும்பி வருகிறார். தாயகத்தைப் பிரிந்த ஏக்கம், குற்றவுணர்ச்சி என்பவற்றின் கலப்பாக அவர் காணப்படுகிறார். தாயகத்தை அவர் எப்படிப் பார்க்கிறார்; தாயகத்தில் உள்ள அவருடைய நண்பர்கள் எவ்வாறு தமது வாழ்க்கையை வியாக்கியானப்படுத்துகிறார்கள் போன்ற எல்லாவற்றையும் திரைப்படம் கூறமுன்வருகிறது.

படம் ஒரு பாரம்பரியக் கூத்துடன் தொடங்குகின்றது. அந்தக்கூத்தில் வருவது அபிமன்யு வதம். அது ஒரு குறியீடு. சுற்றி வளைக்கப்பட்ட இளம் அபிமன்யு எப்படிக் கொல்லப்படுகிறான் என்பதனை அது சித்தரிக்கின்றது. அங்கிருந்து தொடங்கி ஆயுத மோதல்கள் முடிந்த பின்னரும், அதாவது மழைவிட்ட பின்னரும் தூவானம் தொடர்ந்துமிருக்கிறது என்பதைத் திரைப்படம் சித்தரிக்கின்றது. திரைப்படம் வெளிப்படையாக அரசியலைப் பேசவில்லை. பாத்திரங்களும் அரசியல் உள்ளடக்கத்தைக் கொண்டவை அல்ல. ஆனால் தொகுத்துப் பார்க்கும்பொழுது அங்கே அரசியல் உண்டு. அது தேசியப் பண்புமிக்க ஒரு எழுத்துரு. அது தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் அம்சங்களைத் தமிழ்மக்கள் பலப்படுத்தவேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தும் ஒரு திரைப்பிரதி.

திரைப்படத்தின் மொழி இயல்பாக பிரதேச வழக்குகளைப் பிரதிபலிக்கின்றது. எனினும் மையப் பாத்திரம் உட்பட சில பாத்திரங்கள் மோடிப்படுத்தப்பட்ட தொனியில் உரையாடுவது இடைஞ்சலாக இருக்கிறது. தமிழ் மரபுரிமைச் சொத்துக்களான வாழிடம், வழிபாடு, உணவு, விளையாட்டு, பழக்கவழக்கங்கள் முதலான பெரும்பாலான அம்சங்களின் மீது எழுத்துரு கவனம் செலுத்துகின்றது.

தமிழ் மக்கள் தமது மரபுரிமைச் சொத்துக்களை, உள்ளூர் உற்பத்தியை பொதுப் பொருளாதாரத்தை வளர்த்தெடுக்க

இதன் தொடர்ச்சி 08 ஆம் பக்கத்தில் பார்க்கவும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

# "டயஸ்பொறா தூவானத்தை..."



வேண்டும் என்ற செய்தி அதில் உண்டு. புலம்பெயர்ந்த தமிழ் நோக்கு நிலையிலிருந்து தாயகத்தைப் பார்ப்பது, தாயக நோக்கு நிலையிலிருந்து புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தைப் பார்ப்பது போன்ற பல்வேறு அம்சங்கள் உரையாடலின் போக்கில் வருகின்றன.

திரைக்கதை ஒரு கிளைமாக்ஸ் காட்சியை நோக்கிக் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. மையப்பாத்திரம் யுத்த காலத்தில் கடல் வழியாக நாட்டை விட்டுப் புலம்பெயர்கின்றார். புலம்பெயர்வுக்கு முன் பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலங்களில் அவருக்கு நெருக்கமான நண்பன் ஒருவன் பாடசாலை பரிசளிப்பு விழாவில் தனக்கு கிடைத்த ஒரு பொருளை இவருக்குப் பரிசாக வழங்குகிறான். நாட்டை விட்டுப் புலம்பெயரும் பொழுது இவர் அந்தப் பரிசுப் பொருளை பத்திரமாக வைத்து விட்டுச் செல்கிறார். புலம்பெயர்ந்த நாட்டில் தன்னை நிலைப்படுத்திக் கொண்டபின் பிள்ளைகளோடு நாடு திரும்பி வருகிறார். தன்னுடைய பள்ளிக்கூட நண்பனைச் சந்திக்கும்பொழுது அவன் தனக்குப் பரிசாகத் தந்த அப்பொருளைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

அவருடைய நண்பன் போரில் காயப்பட்டு இழப்புக்களோடு காணப்படுகிறார். எனினும் உள்நாட்டு உற்பத்திகளின் மூலம் பொருளாதார ரீதியாகப் பலமான நிலையில் காணப்படுகிறார். புலம்பெயர்ந்து சென்ற தன் நண்பனுக்கு புத்திமதிகள் கூறத்தக்க முன்னுதாரணம்மிக்க ஒரு தொழில் முனைவோராக அவர் வளர்ந்து நிற்கிறார்.

நண்பர்களுக்கிடையிலான உரையாடல், தாயகத்துக்கும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்துக்கும் இடையிலான உரையாடலாக வளர்ந்து செல்கிறது. ஆயுத மோதல்களுக்குப் பின்னரான தமிழ் வாழ்வை குறிப்பாக தாயகம், புலம்பெயர்ந்த சமூகம் ஆகிய இரண்டு பரப்புக்களையும் உள்ளடக்கி உருவாக்கப்பட்ட ஒரு திரைப்படம் இது. தாயகத்துக்கும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்துக்கும் இடையிலான இடையூடாட்டங்கள், எதிர்பார்ப்புக்கள், ஏமாற்றங்கள், முற்கற்பிதங்கள் போன்றவற்றைப்பற்றி அது பேசுகிறது.

புலம்பெயர்ந்த தமிழ் நோக்கு நிலையில் இருந்து "தூவானத்துக்கு" அதிக வரவேற்பு கிடைக்கலாம். அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த பன்னாட்டுத் திரைப்பட விழாவில் பங்கு பற்றுவதற்காக கனடாவில் இருந்து திரைப்பட இயக்குநர் லெனின் சிவம் வந்திருந்தார். அவர் தூவானத்தைப் பார்த்துவிட்டு "டயஸ்பொறா இந்தப் படத்தைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடித் தீர்ப்பார்கள்" என்று கூறியிருக்கிறார்.

இவ்வாறு தாயகம் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஆகிய இரு தரப்பு நோக்கு நிலையிலிருந்து ஒரு பரந்த தளத்தில் தமிழ் மக்களை இலட்சியபூர்வமாக, அறிவுபூர்வமாக ஒரு தேசமாகக் கட்டியெழுப்புவதற்குரிய அடிப்படைகளின் மீது இத்திரைப்படத்தின் பிரதி அதிகம் கவனம் செலுத்தியிருக்கின்றது.

இந்த அறிமுகக் குறிப்பானது அந்தப் பிரதியின் அரசியலைத்தான் குறிப்பாகக் கவனத்தில் எடுக்கின்றது. திரைப்படத்தின் எழுத்துருவில் காணப்படும் தேசியப் பண்பை சிலாகித்துக் கூறும் அதேசமயம், அந்த எழுத்துரு எந்தளவு தூரம் கலையாக மேலெழுகிறது என்பது பற்றி விவாதிப்பது இந்தக் குறிப்பின் நோக்கமல்ல. அது தனியாக ஆராயப்பட வேண்டும். ■

## இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை ஆயராகி 11 ஆண்டுகள் நிறைவு!

மன்னார் மறைமாவட்ட ஆயர் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு 11 வருடங்களை நினைவுகூர்ந்து மன்னார் மறைமாவட்ட யாத்திரிகர் ஸ்தலங்களில் ஒன்றான மாந்தை மாதாவின் திருப்பதியில் அண்மையில் வழிபாடுகளும் கொண்டாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

**ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை 6 வருடங்கள் கொழும்பு மறைமாவட்டத்தில் துணை ஆயராக இருந்ததுடன் 5 வருடங்கள் மன்னார் மறைமாவட்ட ஆயராகவும் இருந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.**



## யாழில் சுதந்திர தினத்தையொட்டிய கலாசார விழா!

இலங்கையின் 75 ஆவது தேசிய சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, இசைக் கச்சேரியுடன் கூடிய 'யாழ்ப்பாணம் மாவட்டக் கலாசார விழா' யாழ். **கோட்டைக்கு அருகிலுள்ள முற்றவெளி திறந்தவெளி அரங்கில் அண்மையில் நடைபெற்றது. அதன் பதிவுகள்.**





# மெல்லத் தொலையும் பசுமை!

ப.சிவதர்சினி
பட்டப்பின்படிப்பு
விவசாய விரிவாக்கக் கற்கை
பேராதனைப் பல்கலைக்கழகம்

ஒருகாலத்தில் தெருவோரம் நடந்து போகின்ற மக்கள் இளைப்பாறும் இடமாக பல பசுமை நிறைந்த மரத்தடிகள் இருந்தன. அதுமட்டும்லாது, பலர் மாலைப்பொழுதுகளில் கதைபேசி சிரிக்கும் இடமாகவும், சிறுவர்கள் ஓடித்திரிந்து விளையாடும் இடமாகவும் அப்பசுமை மரத்தடிகள் திகழ்ந்தன. அவ்வாறு அன்றைக்கு இயற்கையுடன் இணைந்த வாழ்க்கையை வாழ்ந்த மக்கள் கூடிய ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். ஆனால், இன்றைக்கு நாட்டின் வளர்ச்சி என்ற பெயரில் வனங்களையும் வளங்களையும் தொலைத்துவிட்டுத் திரிவது கண்கூடு.

இனிவரும் காலங்களில் நாங்கள் மரத்தடியைத் தேடிப்பிடிப்பதென்பது என்பது 'முயல்கொம்பு தேடுகின்ற' கதையாகிப் போய்விட்டது. மரத்தடிகள் எல்லாம் கட்டடங்களாக மாறிய கதைகள்தான் தற்போது எஞ்சியிருக்கின்றன.

எங்களுடை மக்கள் தொடக்கம் அரசியல் வாதிகள் வரை அதற்கு அபிவிருத்தி எனப் பெயர் வைத்து வருகிறார்கள். நிஜமரங்கள் எல்லாம் பச்சை நிற நிழல் மரங்களாக மாற்றப்பட்டு வருவதற்கு பெயரா அபிவிருத்தி?

அண்மைக்காலமாகவே எத்தனை தெருவோரப் பெரிய அடையாள மரங்கள் அழிக்கப்பட்டு அவ்விடத்தில் புனரமைப்புச் செயற்பாடுகள் என்றரீதியில் பெரிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது. மரங்களை அழித்து பெரிய கட்டடங்களைக் கட்டி இயற்கைச் சமநிலையை சீர்குலைத்துவிட்டு இயற்கை இயல்பை மாற்றிவிட்டது என்று கூக்குரலிடுகின்றனர்.



இயற்கை வள ஆய்வாளர்களால், நிலத்தடி நீர்நிலைகள் மாற்றமடைந்து வருவதற்கும், வெப்பநிலைக் காலங்கள் குளிர் காலமாக மாற்றமடைந்து வருவதற்கும், வழமையாக மழை பெய்யும் காலங்களில்லாமல் வேறு காலங்களில் (பருவம் தவறி) மழைபெய்து வருவதற்கும் முக்கிய காரணங்களில் ஒன்றாக மரங்கள் அழிக்கப்படுவதும் காடுகள் அழிக்கப்படுவதும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இன்று இயற்கையைக்கூட காசு கொடுத்து அனுபவிக்க வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இயற்கை வளங்களை அழித்துத்தான் அபிவிருத்தியை ஏற்படுத்தலாம் என்கின்ற தவறான எண்ணப்போக்கை நீக்கி எங்களது வளங்களைப் எவ்வாறு பாதுகாத்து நாட்டின் வளர்ச்சியை ஏற்படுத்தலாம் என சிந்தித்து செயற்படும்போதே பசுமையான மரங்கள் மட்டுமல்லாது ஏனைய இயற்கை வளங்களும் அடையாளச் சின்னங்களும் பாதுகாக்கப்படும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இல்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 15

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இல்லை. தேசியப் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்தும் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் முறையாக முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன.

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை வெளிப்படுத்தும் செய்தியாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன்போது, விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடனும், நலமுடனும் இருப்பதாகவும், அவர் விரைவில் வெளிவருவார் என்றும் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?' என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதில் வழங்குகையிலேயே அமைச்சர் பந்துல இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசியப் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்தும் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் நாளாந்தம் பாதுகாப்புச் சபைக் கூட்டம் இடம்பெறுகின்றது. அதற்கமைய புலனாய்வுத் தகவல்கள் உள்ளிட்ட சகல தகவல்கள் தொடர்பிலும் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட்டு வருகிறது. எனவே அது குறித்து பிறிதாகக் கலந்துரையாடுவது நியாயமானது என்று நான் எண்ணவில்லை - என்றார். (ம)

## காணாமற்போன...

(வயது-39) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு குடாரப்பு பகுதியிலிருந்து கடந்த 12ஆம் திகதி அவர் கடற்றொழிலுக்காகச் சென்றார். நேற்றுமுன்தினம் வரையில் அவர் மீண்டும் கரை திரும்பவில்லை. இதையடுத்து அவரைத் தேடும் பணிகள் முழு வீச்சில் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையிலேயே காணாமற்போன மீனவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இறப்புத் தொடர்பில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி எஸ்.சிவராசா மேலதிக விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-26-20)


# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 02 . 1942

மறைவு 13 . 02 . 2023



## வைத்திலிங்கம் தனபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி)

கொட்டடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மற்றும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தனபாலசிங்கம் அவர்கள் கடந்த (13.02.2023) திங்கட்கிழமை நல்லூரில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - ஜானகியம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான துரைசாமி - இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகராணியின் அன்புக் கணவரும், சுரேஷ்குமார் (ஜேர்மனி), சதீஸ்குமார் (ஜேர்மனி), ராஜ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமிர்தகலா (ஜேர்மனி), சகிரா (ஜேர்மனி), தனுஷா (Doctor) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பவித்திரன் (ஜேர்மனி), சஜித் (ஜேர்மனி), சாஜித் (ஜேர்மனி), எமில் (ஜேர்மனி), மீனா (ஜேர்மனி), அதிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், பூபாலசந்திரன் (கனடா) அவரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், அமிர்தலிங்கம், யோகநாதன், யோகரட்ணம் மற்றும் யோகநாயகி, யோகேஸ்வரன், யோகாம்பிகை, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கனகாம்பிகை மற்றும் சந்திராதேவி, கிருபாநிதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.60, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077 94 35 088

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23360) 1-6



# மரண அறிவித்தல்

## அமரர் திரு.முடியப்பு றெமிடியஸ்

(சட்டத்தரணி, மாநகரசபை உறுப்பினர்)



யாழ்ப்பாணம் பாஷையூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல சட்டத்தரணியும் யாழ் மாநகர சபை உறுப்பினருமான முடியப்பு றெமிடியஸ் கடந்த (11-02-2023) சனிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கயித்தாம்பிள்ளை முடியப்பு, கிறிஸ்ரினம்மா தம்பதிகளின் அன்பு மகனும், பிலேந்திரன் சேவியர், மேரி ஜெனற் தம்பதிகளின் அன்பு மருமகனும் மேரி சதாயினியின் அன்பு கணவரும் அபினாஸ், பிரவினாஸ், தனுஷாந் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கிப்சன் (ஜேர்மன்), டொறன்சி (பிரான்ஸ்), நிக்சன், ஜெமிலா, எயூஸ்ரன் டியூரி( கெவின்) (பிரான்ஸ்), சுதா ஆகியோரின் சகோதரனும் கொன்சன் (பிரான்ஸ்), சுமதி, யூட்மன் (பிரான்ஸ்), சோபனா (பிரான்ஸ்), டீன், ஜேசுராஜ், சகாயராயன், ஜெனா, ஆசா ஆகியோரின் மைத்துனரும் கௌத்தமி, ஆகாஸ், மத்தீஸ், மஏவா ஆகியோரின் பெரிய தகப்பனும் போள்விம்மன், மேர்சி, பிளேசி, யோசப் ஆகியோரின் சிறிய தகப்பனும் டிசாந், ஸ்ரெபானி, ஸ்ரெபான், ஷிடான், றிகானா, ஷியோனா, ஷர்மின், ஷப்றினா, அமேசா, பெனோஜன், அமேக்கா, செனோபியா, கர்ஸ்சோன் மாரியோ, ஜெசிக்கா ஆகியோரின் ஆசை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பாஷையூர் சென் அன்ரனிஸ் மைதானத்தில் இன்று (15.02.2023) புதன்கிழமை முற்பகல் 11.00-3.00 வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு. அதனைத்தொடர்ந்து பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.




காலை 10.00 மணியிலிருந்து
நேரடி ஒளிபரப்பு :
https://youtube.com/live/_dllpr8mQz_g?feature=share

பிறப்பு 31.12.1967

இறப்பு 11.02.2023

தகவல்:
மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிட்டும் நாங்களும்

# மலையகத்தின் பார்வையிலிருந்து!



**யாழின் தேசிய உணவு பிட்டுத் தான். யாழ்ப்பாண உறவு களுக்கு பிட்டு என்பது உணர்வோடு கலந்த உணவு.**

பா.கனகேஸ்வரி
ஊடக கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

மலையகத்தில் தேயிலைச் செடிகளுக்குள் பிறந்து வளர்ந்த எங்களுக்கு, பிட்டு என்பது எப்போதாவது வீடுகளில் சமைக்கப்படும் உணவுதான். பிட்டோடு பாலும், சீனியும், வாழைப்பழமும் மாதம் இருமுறை சாப்பிட்டுப் பழகிய எங்களுக்கு, பிட்டை தேசிய உணவாக காண்பித்தது யாழ்ப்பாணம்தான். நான்கு வருடங்களுக்கு முன்பு பிட்டு என்பது பாகற்காய் போன்று, பெயரை கேட்டதுமே முகம் சுளித்துக்கொண்டதும் உண்மைதான்.

ஆரம்பத்தில் பிட்டுக்கும் எங்களுக்கும் ஆகாது. இந்த இடைவெளி மிகைத்தூரமானது. பல்கலைக்கழகம் வரும்போதெல்லாம் யாழ்ப்பாண நண்பர்களிடம் உங்களுடைய ஊர் என்ன? பெயர் என்ன? என்பதை எல்லாம் கேட்டதே இல்லை. பேசும் மொழியில் யாழின் உறவுகள் என்று கண்டுபிடித்த பின்னர், முதலில் கேட்பது எப்படிப் பிட்டைச் சாப்பிடுகிறீர்கள்? என்றுதான். இப்போது நினைக்க சிரிப்பாக இருந்தாலும் வாசிக்கும் போது, உங்களுக்கு வியப்பாக இருந்தாலும் உண்மை இதுதான்.

இதற்கு யாழ்ப்பாண உறவுகள், சிரித்த முகத்தோடு 'ஏன்?... பிட்டுக்கு என்ன? அது எங்கள் தேசிய உணவு...' என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டுக் கடந்துவிடுவார்கள். அப்போது எங்கோ வாசித்த 'கஞ்சி கடைப்படி, சோறு சொன்ன இடம், பிட்டு பட்டணம்' என்ற வார்த்தைகள்தான் நினைவுக்கு வந்துசெல்லும். விடுதி உணவுகளுக்குப் பயந்து யாழ்ப்பாண நண்பர்களின் வீடுகளுக்குச் சென்றபோதுதான் பிட்டின் மகத்துவம் புரிய ஆரம்பித்தது. அதன் சுவை தெரிய ஆரம்பித்தது. விதவிதமான கறிகள், பிட்டும் மீன் குழம்பும், பிட்டும் நண்டுக் குழம்பும், பிட்டும் இறால் பொரியலும் போன்ற விதம்விதமான இதர உணவுப்பண்டங்களுடன் அதை மனநிறைவாகச் சாப்பிட்ட பின்பு தான் தெரிந்தது.

யாழ். உறவுகளின் வாழ்க்கையில் இத்தனை சுவையான பிட்டு எப்படித் தேசிய உணவாகியது என்பதன் அர்த்தமே புரிந்தது. இப்போதெல்லாம் பிட்டு இல்லாத நாள் இல்லை என்றாகிவிட்டது. உண்மையில் காலையில் பிட்டுச் சாப்பிட்டால் போதும் பசி என்பது சற்றுத் தொலைவில்தான்.

# தமிழ் புத்தகக் கண்காட்சி

ஈழ, இந்திய புகலிட எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் முகமாக லண்டனில் இரு நாள்கள் கொண்ட தமிழ் புத்தகக் கண்காட்சி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

குறித்த கண்காட்சி எதிர்வரும் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் Kerala House, 671, Romford Road, Manor Park, Eastham, E12 5AD எனும் இடத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஈழ, இந்திய, புகலிட எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் முகமாக புத்தகங்களும் சஞ்சிகைகளும் பார்வைக்கு வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மொழிப்பற்றை ஊட்டி வளர்க்கவும்**

குறித்த கண்காட்சியில் 500 க்கும் மேற்பட்ட தலைப்புக்களில் புத்தகங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. வாசிப்புப் பழக்கம் அருகிவரும் இன்றைய சூழலில், அதுவும் புலம்பெயர் நாடுகளில் தமிழ் புத்தகக் கண்காட்சியை நடத்துவது காலத்தின் தேவையாக உணரப்பட்டுள்ளது. இங்குள்ள அடுத்த தலைமுறையினருக்கு தமிழ் மொழியையும், எம்மொழியில் உள்ள புத்தகச் செல்வங்களையும் அறிமுகம் செய்வதோடு, அவர்களிடத்தே மொழிப்பற்றை ஊட்டி வளர்க்கவும் இந்தப் புத்தகக் கண்காட்சி உதவும் என ஏற்பாட்டாளர்கள் நம்புகிறார்கள்.

இருநாள்கள் நடைபெறவுள்ள கண்காட்சியில் அரங்க நிகழ்வுகளும் எழுத்தாளர்களுடனான சந்திப்புக்களும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எழுத்தாளர் உரை**

குறித்த நிகழ்வில் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு எழுத்தாளர் மு. நித்தியானந்தன் 'வீடுகளில் நூல்கள்' எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். குறிப்பாக புகலிட நாடுகளில் வாசிப்பு மற்றும் புத்தகப் பண்பாடு குறித்து இந்த உரையில் அவர் விளக்கவுள்ளார். அத்துடன் சனிக்கிழமை 18ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு 'வனத்தில் அலைதல்' எனும் தலைப்பில் எழுத்தாளர் தமிழ்க்கவி உரை நிகழ்த்தவுள்ளார்.

ரஜீவன் இராமலிங்கம்

# காதலின் பரிசு

நமக்கான முதலிரவில்
நீயும் நானும் மட்டுமே...
இரவுகளின் நீடிப்பு அன்று மட்டும் அதிக நேரம் தொடர வேண்டும்...

உன் இதழ் முத்தங்கள் என்
உடல் முழுவதும்...
இடையிடையே நீ இடை வருடுவதும்...
இனிக்கும் இசையாய் என் சிணுங்கல்கள்...
உன் செவிகளை இனிமைப் படுத்துவதும்...

நீ ஒரு தேசம்
நான் ஒரு தேசம்
நாம் இருவரும் எல்லை மீறினால் சந்தோஷம்...

மழை நாள்களென்றால் உன்
இதழ் முத்தங்களால்
என் மூச்சுக் காற்றை சூடேற்று...

உன் அணைப்பின் நெருக்கத்தில்
என் இணைப்பின் தவறுகளைச் சரி செய்து விடு...


இரவுகள் உறக்கத்திற்கென்றால் எனக்கு மட்டும் உன்னோடு
நெருக்கத்திற்கான இரவாகவே அது இருக்க வேண்டும்...

உறக்கமில்லாமல் நாம்
உரசுகையில் என் உணர்வுகளை நீ மொத்தமாக திருடிக் கொள்ளவே
நான் விரும்புகிறேன்...

நம் இருவரும் யுத்தம் செய்யும் போது சத்தமின்றி முத்தங்களே
அதிகம் யுத்தம் செய்து கொள்கிறது...

கட்டியணைத்து நீ எனை
முட்டிக் கொள்கையில்
விட்டு விட மனமில்லாமல்
விட்டுக் கொடுக்கிறேன்
என்னை உன்னிடம்...

உனைக் கூடும் நாளையெண்ணி நிதம்
வாடும் பேதை இவள்...



மதுரா
புங்குடுதீவு

# எந்நகை தானணிந்தாலும் புன்னகை போலேதுண்டு..?



எத்தனை பொக்கிஷமாய்
பாதுகாப்புப் பெட்டியிலே
பூட்டி வைத்திட்டோம்..
அருமருந்தாம் வாழ்வுதனை
பாதியிலே தொலைக்கின்றோம்.

எவ்வளவு அவசரமாய்
எதையெதையோ தேடினாலும்
யாரோ ஒருவரின் அந்த
ஒற்றைச் சிரிப்புக்கு
அத்தனையும் தானடிமை

கொஞ்சமாய் சிரித்துவிட்டால்
ஒன்றும் குறையாது
ஆனாலும் அதற்கு ஏன்
இவ்வளவு யோசனைகள்..
வீணான அழுத்தங்கள்..
முரட்டுப் பிடிவாதங்கள்...


எதைத் தானிழந்தாலும்
அத்தனை பகையையும்
ஓட வைத்துவிடும்
தேடிக் கிடைக்காத
அரிய ஔதமது..

கொஞ்சமாய் தானேனும்
நெஞ்சம் நிறைய
நகைத்திடுங்கள்..
நிச்சயமாக உணர்வீர்கள்
அத்தனை பேரின்பத்தை..

அத்தனை பொன்நகையும்
புன்னகைக்குத் தான் அடிமை..

த.தேனுஜா
புளியங்கூடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்பு

## அறிவார்ந்த சமூகத்தின் தேடல்

■ கே.எஸ்.சிவஞானராஜா

உடலுக்குச் சுவாசிப்பு எப்படி அத்தியாவசியமோ, அதேபோல உளப்பசிக்கு வாசிப்பு என்பது பிரதான வரமாக வல்லமை பெறுகிறது. உலகில் 100 கோடி புத்தகங்கள் நல்லநிலையில் இருப்பதாக ஒரு சர்வதேச நிறுவனம் தனது ஆய்வில் எடுத்தியம்புகின்றது. ஆனாலும் பெருவாரியான புத்தகங்கள் இன்னுமே கைபடாமல், மெய்படாமல், கண்படாமல் எவராலும் கவரப்படாமல் இருக்கின்றன. பண்டிதர்களும் புலவர்களும், ஞானிகளும், விஞ்ஞானிகளும் மாற்றுகின்ற பயனுள்ள ஒரு செயற்றிட்டம் இருக்கும் பட்சத்தில் சிறைச்சாலைகள் அறிவார்ந்த பாடசாலையாக மாற்றப்படும் என்பது திண்ணமே.

அண்மையில் இலங்கையில் ஒரு கைதியானவர் அதியுயர் விருதான 'சாகித்திய ரத்னா' பட்டத்தையும் பதக்கத்தையும் பெற்று இலங்கையரை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். இவர் சிறையில் இருக்கும்போது ஒவ்வொரு நிமிடத்தையும் அவம் போகாமல் தவமாக்கிய நிலையில் வாசிப்பையும் எழுத்தையும் சேமிப்பாக்கி சட்டங்களுக்கே ஒரு திருத்தத்தை அவசியமாக்கினார். சாகித்தியரத்னா விருதை, ஓர் அரசு தனது கைதிக்கே வழங்கி வாசிப்பையும் மொழியையும் எழுத்தாக்கத்தையும் படைப்பாற்றலையும் ஊக்குவித்துள்ளது என்றால் ஏன் விடுதலை செய்ய முடியவில்லை? என்ற வினாவுக்கு உரிய செயற்றிட்டம் இனியாவது பிறக்கும் என நம்பலாம்.

வாசிப்பு என்ற பண்புக்கும், புத்தாக்கப் படைப்பிலக்கிய நூலுக்கும் ஒரு சிறைக்கைதி விடுதலை செய்யப்படுகின்ற வரலாறு இனி இலங்கையில் பதிவாகும் என நம்பலாம். ஐரோப்பிய நாடொன்றில் கைதியானவர் சிறையில் கொடுக்கப்படும் நூலை வாசித்து முடிப்பாராக உறுதி செய்யப்படும் பட்சத்தில் அந்தக் கைதி விடுதலை (அனைத்துக் குற்றங்களுக்கும் பொதுவல்ல) செய்யப்படுகின்றார்.

இது ஒரு சமூகத்துக்கான ஒரு தூரநோக்குச் சிந்தனையாகும். இது எமது நாட்டுக்கு ஏன் பொருந்தாது?. பொருந்துமே! ஊடகங்கள் வாசிப்பை ஊக்கப்படுத்தி ஓர் அறிவார்ந்த சமூகத்தை இவ்வுலகுக்கு வரமாக்க ஆவல் கொள்கின்றன. ஒவ்வொரு பத்திரிகையின் ஆசிரிய தலையங்கமும் அதற்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகும். இணையவழி வாசிப்பும் கற்றலும் ஒருபுறம் சமாதானப்படுத்தினாலும், கையால் எழுதி வாசித்து வடிவமைப்பதுபோல மூளை சோபிக்காது. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தரும் கண்ணும் கணினியும் கடுகதியாய் உலகை வாட்டும்.

உலகில் எதிர்வரும் காலங்களில் அசாதாரண இடர்களால் முடங்கும் நிலை ஏற்பட்டால் மிஞ்சப்போவதும் விஞ்சப்போவதும் வாசிப்பொன்றேயாம். வாசிப்பொன்றாலேயே உலகை ஆளவும் முடியும், வெல்லவும் முடியும், காக்கவும் முடியும். ■

# போதைக்கு எதிரான போருக்கு

உடுவிலூர் கலா

எமது சமூகம் பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. திரும்பும் இடமெங்கும் போதையின் நெடிய வாசனை. இந்தத் துர்ப்பாக்கிய நிலையில் இருந்து சமூகத்தை, குடும்பங்களை, தனிமனிதனைப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உள்ளது. இனியும் ஏனோதானோ என்று இருந்துவிட முடியாது.

அண்மைக்காலங்களில் அருவருப்பான செயல்கள் போதையாய் அரங்கேறியுள்ளன. போதை தரும் மயக்கம் உடன்பிறப்புகளையே பந்தாடுகின்றன. இதுவரை போதையின் ஆக்கிரமிப்பாய் எத்தனை பெண்கள் தற்கொலையிலும், கொலையிலும் உயிர் நீத்துள்ளனர். போதையானது உட்கொள்பவரையும், குறிப்பாகப் பெண்களையும் குறிவைத்துக் கொல்கிறது.

குறிப்பிட்ட சில காலத்தின் பின்னர் உடலாலும் உள்ளத்தாலும் பாதிப்புற்று போதையாளர்கள் தூக்கிட்டும், மின் கம்பங்களில் மோதியும், நச்சுத்திராவகம் அருந்தியும் தமதுயிரைத் தாமே தொலைக்கின்றனர்.

போதைப்பொருள் தடுப்பாக, கிராமங்களில் சனசமூக நிலையங்கள் பங்காற்ற வேண்டும். எமது சமூகத்தில் பெரும்பாலான சனசமூக நிலையங்கள் பதவிக் கதிரைகளை அணைத்தபடி தூங்குகின்றன. அவை இன்னமும் விழித்துக்கொள்ளவில்லை.

இவையெல்லாம் விழித்துக்கொள்ளும் பொழுதில் பெண்ணினத்தின் பெரும்பான்மை மண்ணோடு மண்ணாக, சாம்பலோடு சாம்பலாக ஆகிவிடும்.

**“பெற்றோர் பிள்ளைகள் மேல் போதிய அக்கறை செலுத்துங்கள். அவர்களை விட்டு விலகாதீர்கள். அறிவியல் உலகில் பிள்ளைகளை விட்டு பெற்றோர் விலகிவிட்டனர். பெற்றோரின் இந்த இடைவெளி பிள்ளைகள் போதை என்ற உலகை நோக்கிப் பயணிக்க ஏதுவாய் அமைந்துள்ளது. படித்தவர்கள் வாழும் சமூகத்தில் இப்படி ஒரு கொடூரமா, கடல் கடந்து காவியம் படைத்தவர்கள், மார்தட்டி வாழ்ந்தவர்கள் இன்று போதையின் மாயைக்குள் பிடிபட்டு மீளமுடியாமல் தத்தளிக்கிறோம்”**

### போதையை எப்படி ஒழிப்பது?

போதைக்கு அடிமையானவர்களை எப்படிப் பாதுகாப்பது? போதை வணிகருக்கான தண்டனை என்ன? மாணவ சமுதாயத்தை இந்த மாயவலையிலிருந்து மீட்கும் வழி என்ன? போன்ற கேள்விகள் விடையின்றி கிடப்பில் போடப்பட்டுள்ளன.

முதலில் போதைக்கு எப்படி அடிமையானார்கள், தூயவாழ்வு வாழ்ந்த எம் சமூகத்தில் எப்படி நுழைந்தது? என்றால், சதி என்பது பொதுவான பதிலாக இருந்தாலும், பெற்றோரும் சதிகாரரா? வயது வந்த பிள்ளைகளையும் ஏன் திருமணமானவர்களைக் கூட, கட்டிக்காத்த பெற்றோர் எப்படி தமது பிள்ளைகளிலிருந்து விலகினார்கள்? தமது பொறுப்புகளை சட்டென்று எப்படிக் கைவிட்டார்கள்?

இனியாவது ஆசிரியர்களாக, பெற்றோராக, பொது அமைப்புகளாக, மருத்துவர்களாக, மதகுருமார்களாக ஒன்றுபட்டு கரம் கோர்த்துச் செயற்பட வேண்டும். நாங்கள் யாவரும் ஒன்றிணைந்தால் எதிரியை விரட்டுவது பெரிய காரியமில்லை. எங்கள் மகன், எங்கள் குடும்பம், எங்கள் கிராமம், எங்கள் சமூகம் என்கிற மிகப்பெரிய பொறுப்பை உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிப்போம்.

எல்லாவற்றுக்கும் மேலாகப் பெற்றோர் தம்பிள்ளைகள் மேல் போதிய அக்கறை செலுத்துங்கள். அவர்களை விட்டு விலகாதீர்கள். அறிவியல் உலகில் பிள்ளைகளைவிட்டு பெற்றோர் விலகிவிட்டனர். பெற்றோரின் இந்த இடைவெளி பிள்ளைகள் போதை என்ற உலகை நோக்கிப் பயணிக்க ஏதுவாய் அமைந்துள்ளது.

படித்தவர்கள் வாழும் சமூகத்தில் இப்படி ஒரு கொடூரமா, கடல் கடந்து காவியம் படைத்தவர்கள், மார்தட்டி வாழ்ந்தவர்கள் இன்று போதையின் மாயைக்குள் பிடிபட்டு மீளமுடியாமல் தத்தளிக்கிறோம்



## பெற்றோரே விழித்தெழுக!

அன்பான பெற்றோரே, அடிமையானால் குறிப்பிட்ட நாள்களின் பின் யாராலும் காப்பாற்ற முடியாத நிலையே உருவாகும். பாவத்தின் சம்பளம் மரணம். இன்று எமது சமூகம் போதையில் தள்ளாடுவதற்குப் பெற்றோரே முழுக்காரணம். எனது கட்டுப்பாட்டில் உள்ள பிள்ளை, நான் பெற்ற பிள்ளை, எப்படிப் போதைக்கு அடிமையானான்? என்ற கேள்வியை ஒவ்வொரு பெற்றோரும் கேட்டுப் பாருங்கள். பதில் நீங்களேதான். இவ்விடத்தில் மூன்றாவது சமூகத்தை குடும்பத்தை நாம் பெற்ற பிள்ளைகளை அக்கறையோடு நோக்குங்கள்.

போதையில் இருந்து பிள்ளைகளை மீட்க பிள்ளைகளோடு நெருங்கி வாருங்கள். அவர்களுக்காக நேரம் ஒதுக்குங்கள். அவர்களின் அகப்புற மாற்றத்தை உற்றுநோக்குங்கள். தவறின் எங்கள் சமூகத்தை யாராலும் காப்பாற்ற முடியாது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட பொருளாதாரத்தில் நலிவுற்ற தெரிவுசெய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகளும் பெண்கள் அமைப்பு ஒன்றுக்கு நிதியுதவியும் முன்னாள் வடமாகாணசபை விவசாய அமைச்சர் க.சிவனேசன் தலைமையில் கனடாவில் இருந்து வந்த இராஜேஸ்வரன் தம்பதியினரால் அண்மையில் வழங்கப்பட்டது. முல்லைத்தீவு-மாங்குளம் மாவீரர் குடியிருப்பில் உள்ள இசை மகளிர் சங்கத்தின் வளர்ச்சிக்காக 50 ஆயிரம் ரூபா நிதி உதவியும் வழங்கப்பட்டது. (ய-19)



# மாந்தை அன்னையின் வருடாந்த பெருவிழா!

மன்னார், பெப். 15

மன்னார் மறைமாவட்டத்தின் யாத்திரிகர் ஸ்தலங்களில் ஒன்றாக விளங்கும் மாந்தை அன்னையின் வருடாந்த பெருவிழா, பங்குத் தந்தை அருட்பணி யே.அமல்ராஜ் குரூஸ் ஒழுங்கமைப்பின்கீழ் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம்பெற்று ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் திருச்சொரூப ஆசீர் வழங்கப்பட்டது.

பெருவிழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டனர். (எ-14-60)




தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைப் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கு சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனால் ஒருதொகுதி சத்துமாப் பேணிகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை வழங்கிவைக்கப்பட்டது. (ய-66)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் தென்மராட்சி பிரதேசத்தில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக கிராம அலுவலர்களால் தெரிவுசெய்யப்பட்ட பொருளாதாரம் நலிவுற்ற 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. (ய-9)

யாழ்.மானிப்பாய்-கட்டுடை விநாயகர் முன்பள்ளியில் கல்வி பயிலும் 30 சிறார்களுக்குப் ‘பூமணி அம்மா’ அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவரான விசுவர்சம் செல்வராசாவின் நிதி அன்பளிப்பில் கற்றல் உபகரணங்கள் மேற்படி முன்பள்ளி மண்டபத்தில் அண்மையில் வழங்கப்பட்டன. (ய-66)






சாந்தசோலை மகளிர் அமைப்பு உறுப்பினர்களால் ‘வவுனியா தமிழ் விருட்சம்’ சமூக அமைப்பின் பத்து வருட செயற்பாடுகளுக்காக அதன் தலைவர் எஸ். சந்திரகுமாருக்கு ‘வவுனியா - மூன்றுமுறிப்பு தமிழ் விருட்சம்’ அமைப்பின் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கௌரவிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது. (ய)



மன்னார் மாவட்ட முச்சக்கரவண்டி சேவையாளர் சங்க புதிய நிர்வாகத் தெரிவு மன்னார் நகரசபை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. மன்னார் நகரசபைத் தலைவர் ஞா.அன்ரனி டேவிட்சன் மற்றும் வடமாகாண போக்கு வரத்து முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன், மன்னார் நகர போக்குவரத்து பொலிஸ் அதிகாரி ஆகியோர் முன்னிலையில் நிர்வாகத்தெரிவு நடைபெற்றது. இதன்போது புதிய நிர்வாகத் தலைவராக எஸ்.சுபதீபன், செயலாளராக எம்.எப். பாசில், பொருளாளராக எம்.இஜாஸ் ஆகியோர் உள்ளடங்கலாக நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (எ-14-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை கூட்டுறவுப் பணியாளர் தரா தரப்பத்திர சாதாரண மற்றும் உயர்தரப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்களை கூட்டுறவுப் பணியாளர்களிடமிருந்து கோரியுள்ளது.

பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறும் பயிற்சிகள் யாவும் எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஆரம்பமாகும் எனவும் கூட்டுறவுச் சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-14-17)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி கலைமதி உதயகுமார்
அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் சின்னையா சிவசுந்தரம்**
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன்
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி


# சட்டவிரோத கடற்றொழிலை எதிர்த்து உடுத்துறை மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 15

வடமராட்சிகிழக்கு - உடுத்துறைப்பகுதியில் சட்டவிரோதமான கடற்றொழில்களைத் தடைசெய்யவேண்டும் என்று கோரி மீனவர்களால் ஆர்ப்பாட்டமொன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நீரியல்வளத்துறை மற்றும் கடற்றொழில் அமைச்சால் விடுக் கப்பட்ட கட்டளைகளை கடற்படை யினர் செயற்படுத்துவதில்லை என்றும், சட்ட விரோத தொழிலில் ஈடுபடுபவர்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும் பிரதான குற்றச்சாட் டாக முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனையடுத்து போராட்டப் பகுதிக்கு வருகைதந்த மருதங் கேணி பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் மீனவர் களுடன் சமாதான பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

அதன்போது சட்டவிரோத கடற் றொழில் தொடர்பில் ஆராய 55ஆவது படைப்பிரிவு தலை மையகத்தில் ஒன்றுகூடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வும், அதுவரை போராட்டத்தை கைவிடுமாறும் கோரிக்கை விடுக் கப்பட்டது.

அதனை ஏற்றுக்கொண்ட மீன வர்கள் எதிர்ப்பு போராட்டத்தைக் கைவிடுவதாகவும், இதற்கு நல்ல முடிவு ஒன்று தரப்படாத பட்சத்தில் அல்லது எடுக்கப்படாத பட்சத்தில் தம்முடைய போராட்டம் தொடரும் என்றும் மீனவர்கள் தெரிவித் தனர். (எ-14-20)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 09 - 02 - 1951



இறப்பு 26 . 02 . 2022

**இராசையா செல்வரத்தினம்**

திதி : தசமி

காலம் எல்லாம் எம்மை சுமந்து வாழவைத்தீர்
நோய் என்று படுக்கவில்லை ஒரு நொடியும் ஓய்வதுமில்லை
விண்ணுலகு சென்றிருந்தாலும் உம் அன்புக்கு விலை பேசமுடியாது
கண்ணின் மணிபோல மனதில் நிறைந்தவர் மறைந்தால்
மெய்க்காக உரிமையுடன் யார் இனி ஆறுதல் சொல்வது? அன்புக்கணவரே
நயம்பட சிரித்து எல்லோருடனும் உறவாடிய
நாளெல்லாம் கழிந்த நினைவுகள்
நித்தமும் ஆயிரம் நிழலாடுகிறது
தாங்க முடியவில்லையே.....

உங்கள் ஆத்மா சாந்தியடைய இராமநாதபுரம் வைரவரும்
கிளிநொச்சி விநாயகரும் துணை வேண்டி அனைவரும்
பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள்.

இல.05,
பழைய கச்சேரி அருகாமை,
கிளிநொச்சி.


# கைமாறிய வாடகைக் கடைகள் உரிமையாளருக்கு கையளிப்பு

## சாவ. நகரசபையில் தீர்மானம்

சாவகச்சேரி நகரசபையில் வாடகைக்குப் பெற்று கைமாறிய கடை அறைகளை தற்போதைய உரி மையாளர்களுக்கு நிபந்தனை அடிப்படையில் கைய ளிக்க சாவகச்சேரி நகரசபை தீர்மானித்துள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் விசேட அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோதே இந்தத் தீர்மா னம் எடுக்கப்பட்டது.

உள்ளூராட்சி திணைக்களத்தின் நகர அபிவிருத்தித் திட்டத்தில், 1976 ஆம் ஆண்டு சாவகச்சேரி நகரசபை யால் பொதுச் சந்தையுடன் இணைந்த காணியில் 62கடை அறைகளுடன் அமைக்கப்பட்ட நவீன சந் தைக் கட்டடம் கொழும்பு உள்ளூராட்சி திணைக்க ளத்தால் கேள்விகள் மூலம் வழங்கப்பட்டன. கடை அறைகளை வாடகைக்குப் பெற்றவர்களில் பலர் ஒப்பந்தத்தில் கைமாறத்தகாது என்ற வாக்கியம் உள்ள போதிலும் பல்வேறு காரணங்களுக்காக (மரணம், இடப்பெயர்வு மற்றும் வெளிநாடு) கடை அறைகளை வேறொருவருக்கு கையளித்துள்ளனர். கடை அறைகளை வாங்கியவர்கள் தொடர்ச்சியாக வாடகையாளரின் பெயரில் மாதாந்த வாடகையை செலுத்தி வந்துள்ளனர். முன்னைய சபை இயங்கிய காலத்தில் தற்போது கடை நடத்துபவர்கள் உரிய ஆவ ணங்களை சமர்ப்பித்து தமது பெயருக்கு வாடகைப் பெயரை மாற்றித்தர வேண்டும் என்று கோரியதைய டுத்து சில கடை அறைகள் சபையின் அனுமதியுடன் ஒருதொகை வைப்பு நிதி பெற்று வாடகையாளரின் பெயரை மாற்றிக்கொடுத்துள்ளனர். தற்போது சிலர் தமது பெயருக்கு கடை அறைகளை மாற்றித்தர வேண்டும் என்று கோரிய கடிதங்கள் சபை அமர்வில் தவிசாளரால் சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வேளையில் சபையின் அனுமதியின்றி கடைகளை வாங்கியவர் களிடமும் விற்பனை செய்தவர்களிடமும் தண்டப் பணம் அறவிடுவதுடன் 20 வருடத்துக்குரிய வாட கைப் பணத்தை வைப்பு நிதியாகப் பெற்று வழங் குமாறு சபையில் தீர்மானிக்கப்பட்டது. சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் க.சிவநி தன் தலைமையிலான குழுவினர் இது தொடர்பில் தவிசாளருடன் நேரடியாகக் கலந்துரையாடி வைப்பு நிதியைக் குறைக்க வேண்டுமெனக் கேட்டுள்ளனர். அதற்கமைய 10 வருட வாடகையை வைப்பு நிதியாகப் பெற்று, பெயர் மாற்றிக் கொடுக்க சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டது. (எ-14-9)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்
**இராசலிங்கம் விசாலாட்சி**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 14 |
| 12 | 01 |
| 1934 | 2023 |

கடந்த 14.01.2023 அன்று இறையடி சேர்ந்த எமது குடும்ப குலவிளக்கு இராசலிங்கம் விசாலாட்சி அவர்களின் மரணச்செய்தி அறிந்து வருகை தந்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் **இன்று (15.02.2023) புதன்கிழமை** அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
சங்கானை.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



**கணபதிப்பிள்ளை அம்பிகைபாகன்**

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகக் கொண்ட (இங்கிரியா) கணபதிப்பிள்ளை - அம்பிகைபாகன் 13.02.2023 திங்கட்கிழமையன்று இலண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இங்கிரியா வர்த்தகர் கணபதிப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகனும் வலந்தலையைச் சேர்ந்த முன்னாள் புகையிரத நிலைய அதிபர் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை - பரமேஸ்வரி (பரஞ்சோதி) தம்பதியின் அன்பு மருமகனும் சந்திராவின் பாசமிகு கணவரும் அபிராமியின் அன்புத் தந்தையும் விபுலனின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தொடர்புகட்கு
சந்திரா (மனைவி)-0044 7982 236467
ஐங்கரன்(பெறாமகன்)-077 8666 155
[illegible](மைத்துனர்)-077 7343 551

தகவல்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வளர்ப்பு பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திரசிகிச்சை

தென்மராட்சி பிரதேசத்தில் வளர்ப்பு பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் பணிகளை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை முன்னெடுத்துள்ளனர்.

எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் தொடர்ச்சியாகஒவ்வொரு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளிலும் வளர்ப்பு பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஒலிபெருக்கிமூலம் அறிவிக்கப்படும் நிலையத்துக்கு தமது வளர்ப்பு பெண் நாய்களை அழைத்து வந்து சத்திர சிகிச்சை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (ய-9)

## மருத்துவர்...

நீதிமன்றத்தால் அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்ட மருத்துவர் சிவரூபன் இன்று காலை 8.30 மணிக்கு பளை மருத்துவமனையின் பொறுப்பதிகாரியாக மீண்டும் கடமை யேற்கவுள்ளார்.

மருத்துவர் சிவரூபன் கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் பொலிஸாரால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் அவருக்கு அண்மையில் நீதிமன்றம் பிணை வழங்கியது. இதையடுத்தே மருத்துவர் பளை மருத்துவமனையின் பொறுப்பதிகாரியாக இன்று பொறுப்பேற்கவுள்ளார். (அ-ம-9)


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 90 ரூபாய்.

077 334 1281 (22911) 4.6)

## 22 விற்பனைக்கு 22

யாழ் கீரிமலையில் 100 பரப்பு காணியும். யாழ் பலாலியில் 100 பரப்பு காணியும். யாழ் நிலாவரையில் 100 பரப்பு காணியும். யாழ் காரைநகர் மேற்கு வீதியில் 30 பரப்பு காணியும். யாழ் பிறவுண் வீதியில் 2 பரப்பு காணியில் அமைந்த கடைகளும். யாழ் பிறவுண் வீதியில் நீராவியடி பிள்ளையார் கோவில் முன்பாக 1 பரப்பில் அமைந்த வீடும் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு
077 723 2535

## வேலையாள்கள் தேவை

புதிதாக திறக்கப்பட்ட அசைவ உணவத்திற்கு சகல வேலைகளும் தெரிந்த ஆட்கள் தேவை.
ஆண்/ பெண்.

077 055 6949 - ஆனைக்கோட்டை

## வாத்தியங்கள் விற்பனைக்கு

எம்மிடம் நல்ல நிலையிலுள்ள **வீணை, தம்புரா, ஹார்மோனியம்** விற்பனைக்குண்டு.

தொடர்பு: K.P. பாலகிருஸ்ணன்
K.K.S. வீதி, நாச்சிமார் கோவிலடி,
பூநாறி மரத்தடி.

T.P.: 075 043 0845

## மணமகள் தேவை

1987 இல் பிறந்த பூசம்.
யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும்,
லண்டன் (PR) உடைய
மாப்பிள்ளைக்கு மணமகள் தேவை.

தொடர்பு:- சுபலக்ஸ்மி
004474 66279770
(CS/23358)4.6

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர்பட்டப்படிப்புகள் பீடம்
## புதிய அனுமதிகள்

1. கல்வியியல் முதுமாணி (MED) - 2023/24 (அணி VII) வவுனியா பிராந்திய நிலையம்
2. சுற்றுச்சூழல் முகாமைத்துவத்தில் முதுமாணி (Master of Environmental Management) 2022/23 (அணி III)
3. நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா (PGD in Library & Information Science) 2022/23 (Batch IV)
4. சுகாதார முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி (MSc in Health Management) 2023/25 (Batch III)
5. இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ். Postgraduate Diploma in Teaching English as a second language 2021/23 (Batch III)
6. பிரதேச திட்டமிடலில் முதுமாணி (Batch III)
7. தூய சக்தித் தொழில் நுட்பங்களில் முதுமாணி 2023/24 (Batch II)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி - 15.03.2023
மேலதிக தொடர்புகளுக்கு - 0212223608

பதிவாளர்
14.02.2023.

(cr.39251) (2.6)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### செல்வி அன்னம் பொன்னம்பலம்
(செல்வி ரீச்சர்)
(ஓய்வுநிலை ஆசிரியை - கொ/கொட்டாஞ்சேனை தமிழ் மகா வித்தியாலயம், யா/ மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்)

தோற்றம் 01.01.1939 — மறைவு 16.01.2023

நல்லுணி வீதி. வடலியடைப்பு. பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்டு பின்னர் வவுனியா. சுதுமலை ஆகிய இடங்களில் வாழ்ந்து, தற்போது 64/7. கலாசாலை வீதியில் வசித்து வந்தவருமான **செல்வி அன்னம் பொன்னம்பலம்** அவர்கள் கடந்த 16.01.2023 திங்கட்கிழமை சிவபதமடைந்த செய்தி கேட்டு நேரில் வந்தும். தொலைபேசி மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறிப் பலவழிகளிலும் உதவிகள் செய்து அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்த அயலவர்கள். உறவினர்கள். நண்பர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றி கூறி அவர்தம் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

64/7, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.
077 239 5786
(CS/23487)4.6

## மரண அறிவித்தல்



### திருமதி பாறுவதிப்பிள்ளை மயில்வாகனம் (பொன்னாலை)

காரைநகர். குமிழங்குளியைப் பிறப்பிடமாகவும். காரைநகர் வேதரடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாறுவதிப்பிள்ளை மயில்வாகனம் கடந்த (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வேதரடைப்பு கந்தையா மயில்வாகனத்தின் அன்பு மனைவியும். S.V. கந்தையா (முகத்துவாரம்) பொன்னாச்சி தம்பதிகளின் மருமகளும். குமிழங்குளி சங்கரப்பிள்ளை மாரிமுத்து தம்பதிகளின் மகளும். தாங்கவேலுவின் அன்புத் தாயாரும். அருந்ததியின் மாமியாரும். அனுஷா. ஈஸ்வரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.02.2023 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் காரைநகர் வேதரடைப்பு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 - 01 - 1935



மறைவு 13 - 05 - 2023

### திருமதி கனகசபை நேசம்மா

யாழ்ப்பாணம் சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை நேசம்மா நேற்றுமுன்தினம் (13.02.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை செல்லம்மாவின் அன்பு மகளும். காலஞ்சென்ற சுப்பிரமணியம் விசாலாட்சியின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும். ரஞ்சிதா. தேவன். யோகன் ஆகியோரின் அன்புத் தாயாரும். காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் சிவசக்தி. அருள்மொழி ஆகியோரின் அன்பு மாமியாரும். காலஞ்சென்றவர்களான பரமசிவம். பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு அக்காவும். திருமதி சரஸ்வதி. திருமதி புவனேஸ்வரி. காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் கணபதிப்பிள்ளை. மனோன்மணி. ஆகியோரின் அன்பு மைத்துனியும். ரஜந்தன். ரமிலா. ரயூரன். ரஜிவர்மன். வித்யா. ஜெயக்குமார். தட்ஷாயினி. தாரகா ஆகியோரின் அன்பு நிறைந்த அம்மம்மாவும். உமாசங்கர். கஜன். சுபித்தன். நிகர்சிதா. தேஸ்சிறி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும். சாயிஷ். அத்விக். ஆதிரன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோவிலடி,
[illegible]

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சித்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாக்குச் சீட்டு அச்சிடல், தேர்தல் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு இவ்வாரத்துக்குள் உறுதியான தீர்வை எடுக்காவிட்டால் திட்டமிவட்ட வகையில் உரிய திகதியில் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றதாகும். ஆகவே நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்க அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

தபால்மூல வாக்கெடுப்பு எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் வாக்குச்சீட்டு அச்சிடும் நடவடிக்கைகள் தற்போது தடைப்பட்டுள்ளன. வாக்கெடுப்பை நடத்துவதற்கான பணிகளுக்கு தடையேற்படும்போது அரச நிறுவனங்களால் தனித்துச் செயற்பட முடியாது. ஆகவே வாக்குச் சீட்டு அச்சிடும் பணிகள் தாமதமானால் தபால் மூல வாக்கெடுப்பை பிற்போட வேண்டிய நிலை ஏற்படும்.

உள்ளூராட்சித் தேர்தல் வாக்கெடுப்பு மார்ச் மாதம் 9ஆம் திகதி இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து வாக்குச்சீட்டுகளும் தபால் திணைக்களத்துக்கு கையளிக்கப்படவேண்டும். தபால் மூல வாக்கெடுப்புக்கான வாக்குச் சீட்டுகள் இன்று (நேற்று செவ்வாய்க்கிழமை) முதல் விநியோகிக்க ஆரம்பித்திருக்கவேண்டும். ஆகவே இந்தப் பிரச்சினைக்கு இந்த வாரத்துக்குள் உரியதீர்வை எடுக்க வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதாக ஆணைக்குழு உயர்நீதிமன்றத்துக்கு வாக்குறுதி வழங்கியுள்ளது. வழங்கிய வாக்குறுதியை பின்பற்றுமாறு உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. ஆகவே நீதிமன்றத்தின் அறிவுறுத்தலுக்கு எதிராக அரசாங்கம் செயற்படுகிறது. இதற்கு நீதிமன்றத்தின் ஊடாகவே தீர்வுகாணமுடியும். நீதிமன்றத்தை நாடுவதைத் தவிர மாற்றுத்திட்டம் ஏதும் எமக்குக்கிடையாது - என்றார். (அ-ம)

## ஒத்திவைக்கப்பட்டது...

ஒத்திவைக்கப்பட்டுள்ளது என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது.

தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுகளை அனுப்பமுடியாது என அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு தேர்தல் ஆணைக்குழு நேற்றுக்காலை அறிவித்துள்ளது.

இந்தமாதம் 22, 23 மற்றும் 24ஆம் திகதிகளில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## தேர்தலைப் பிற்போடும்...

சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வகையில் அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இதற்கு முன்னர் உள்நாட்டிலும் வெளிநாடுகளில் இருந்தும் கடன் பெற்றும், பணத்தை அச்சிட்டும் அரசுகள் தேர்தல்களை நடத்தி வந்தன. ஆனால், தற்போது நாட்டில் நிலவும் நெருக்கடி நிலை காரணமாக கடனைத் திருப்பிச் செலுத்தாத காரணத்தால் வெளிநாடுகளில் இருந்து கடன்களைப் பெறமுடியாதநிலை காணப்படுகிறது.

ஓரளவேனும் நெருக்கடியைக் குறைக்க சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடலைத் தொடர்ந்து நாட்டின் கடனை மறுசீரமைக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதால், பணம் அச்சிடுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

அத்துடன், திறைசேரியின் அன்றாடச் செலவுகளை ஈடுகட்ட பெரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் நிதிப்பிரச்சினையை எதிர்நோக்கும் அதே வேளை, இந்த நாட்டின் ஒவ்வொரு துறையிலும் மேற்கொள்ளப்பட்ட பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் முடங்கியுள்ளன. இருப்பினும், தேர்தலை நடத்தாமல் இருப்பது அரசின் எதிர்பார்ப்பு அல்ல. திறைசேரிக்குப் பொறுப்பான செயலாளர் தற்போதைய நிலைமையின் தீவிரம் குறித்து திறைசேரிக்கு அறிவித்து நீதிமன்றில் விடயங்களை முன்வைத்துள்ளார் - என்றார். (அ-ம-44)

## தேர்தலைப் பிற்போடின்...

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

தேர்தலைப் பிற்போடுவதற்கு ஆளுங்கட்சி முயற்சிக்கின்றது என பரவலாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதும், தேர்தல் குறித்து உறுதியான முடிவு எடுக்கப்படவில்லை.

இந்நிலையிலேயே அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பில் ஆராய சஜித் இந்த அவசர கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். இதன்போது மக்களைத் திரட்டி தொடர் போராட்டம் நடத்துவதே சிறந்தவழியெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய தேர்தலைக்கோரி போராட்டம் நடத்தும் அழைப்பு ஓரிரு நாள்களுக்குள் விடுக்கப்படவுள்ளது. (அ-ம-44)

## ஆர்னோல்டின்...

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2023ஆம் ஆண்டுக்கான பாதீடு நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் 8 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. 45 உறுப்பினர்களைக் கொண்ட மாநகரசபையில் பாதீட்டுக்கு ஆதரவாக 16 வாக்குகளும் எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

2023ஆம் ஆண்டுக்கான பாதீடு; மாநகரசபையில் முதல்வர் இ.ஆர்னோல்டால் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது. விவாதங்களைத் தொடர்ந்து பாதீடு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. 16 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். து.ஈசன், ப.தர்சானந், சுபாதீஸ், சாந்தரூபன் ஆகியோர் சபைக்குப் பிரசன்னமாகவில்லை.

முன்னாள் முதல்வர் மணிவண்ணன் அணியினர் 13 பேர், ஈ.பி.டி.பியைச் சேர்ந்த 7 பேர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த மூவர் மற்றும் குத்துவிளக்குச் சின்னத்தில் போட்டியிடவுள்ள ஒருவர் என 24 பேர் பாதீட்டை எதிர்த்து வாக்களித்தனர். இதையடுத்து 16:24 என்ற அடிப்படையில் பாதீடு தோல்வியடைந்தது.

விபத்தில் உயிரிழந்த யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி றெமீடியஸுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சபைக்கொடி நேற்று அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டதுடன், சபை அமர்வு ஆரம்பிக்கும் முன்னர் 2 நிமிட அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (அ-ம-26-20)

# Pay&Go உடன் கைகோர்க்கும் HNB

இலங்கையின் மிகப்பெரிய தனியார் துறை வங்கிகளில் ஒன்றான HNB PLC, MegaPay (Pvt) Ltd உடனான கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (SMEs) அணுகக்கூடிய மற்றும் மலிவு அட்டை கொடுப்பனவு ஏற்புத் தீர்வை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கையில் முன்னணி டிஜிட்டல் கொடுப்பனவு தீர்வு வழங்குனரான Pay&Go உடன் இணைந்துள்ளது.



இந்த கூட்டாண்மை மூலம், SME தொழில்முனைவோர், Pay&Go Android POS Terminals மூலம் நேரடியான, கொடுப்பனவு இயந்திரங்கள் மற்றும் QR பரிவர்த்தனைகள் ஆகிய இரண்டையும் பயன்படுத்திவிரிவுபடுத்துவதற்குமுன்கூட்டியேPOSஅமைப்புடன் வசதியளிக்கப்படும். இந்த நிகழ்வின் போது HNB கார்ட் பிரிவின் பிரதானி கௌதமி நிரஞ்சன் மற்றும் MegaPay (Pvt) Ltd இன் பொதுப் பணிப்பாளர் வர்தன் அஸ்லிபெக்யான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

"SMEக்கள் இலங்கைப் பொருளாதாரத்தின் முக்கிய உந்துசக்தியாக இருக்கின்றன, மொத்த வேலைவாய்ப்பில் 45% மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரைவாசிக்கும் அதிகமாகும். முன்னோடியில்லாத பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதில், தற்போதைய டிஜிட்டல் உலகில் போட்டிடுவதற்கு தங்களை மாற்றிக்கொள்வதற்காக விலைமதிப்பற்ற நிறுவனங்களுக்கு தொழில்நுட்பம், கருவிகள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றை வழங்குவது உறுதியான காரணிகளில் ஒன்றாக உள்ளது. Pay&Go உடனான எமது கூட்டாண்மையானது, இலங்கையின் SMEகளை தொழில்நுட்ப ரீதியாக வலுவூட்டுவதற்கான இந்த முக்கிய முயற்சியில் மற்றொரு முக்கிய முன்னேற்றத்தை பிரதிபலிக்கிறது." என HNB கார்ட் பிரிவின் பிரதானி கௌதமி நிரஞ்சன் தெரிவித்தார்.

இந்த கூட்டாண்மை மூலம், HNB SME தொழில்முனைவோர், கட்டண அறவீடுகள், PeertoPeer பரிவர்த்தனைகள் மற்றும் QR குறியீடு கொடுப்பனவுகள் உள்ளிட்ட நிறுவன தர முற்பணத்தை ஏற்றுக்கொள்ளும் தீர்வுகளுக்கான அணுகலைப் பெறுவார்கள். புதிய வாடிக்கையாளர் பிரிவுகளுக்கு முன்னோடியில்லாத அணுகலை SME களுக்கு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட பல மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளுடன் குறைந்த கட்டணத்தை ஏற்றுக்கொள்வதையும் இது செயல்படுத்துகிறது, வலுவான ecommerce திறன்களை மேம்படுத்துகிறது.

HNB SMEகள் மொபைல், பயன்பாடுகள், இணையம், காப்புறுதி, தொலைக்காட்சி, வங்கிகள், Wallets, Online சேவைகள் போன்ற பிற சேவைகளுக்கான அணுகலைப் பெறலாம் மற்றும் நன்கொடைகள், வாடிக்கையாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் தங்கள் அன்றாட நடவடிக்கைகளின் போது பரிவர்த்தனை செய்யும் ஒவ்வொரு SMEயின் திறனையும் தீவிரமாக மேம்படுத்துகிறது.

"தற்போது, HNB இலங்கையில் தொழில்முனைவோர்களின் மிகப்பெரிய போர்ட்ஃபோலியோவைக் கொண்டுள்ளது. மேலும் இந்த கூட்டாண்மையானது அனைத்து வணிக நோக்கங்களுக்கும் தடையற்ற கட்டண தீர்வுகளுடன் நாட்டை மேம்படுத்துவதில் எங்கள் சேவைகளின் வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்தும். எங்கள் வாடிக்கையாளர்களின் வாழ்க்கையை மேலும் அணுகக்கூடியதாகவும் சிறந்ததாகவும் மாற்றுவதற்கு அவர்களின் மேம்பட்ட தொழில்நுட்ப நிபுணத்துவத்தைப் பயன்படுத்துவதற்கு HNB உடன் நெருக்கமாகப் பணியாற்ற நாங்கள் எதிர்பார்க்கின்றோம்." என்று MegaPay (Pvt) Ltd இன் பொதுப் பணிப்பாளர் வர்தன் அஸ்லிபெக்யான் தெரிவித்தார்.

MegaPay (Pvt) Ltd, "Pay&Go" என்ற வர்த்தக நாமத்தின் கீழ் இயங்குகிறது. இது இலங்கையின் புத்தாக்கமான கட்டணச் செயலாக்கம் மற்றும் கட்டண சேகரிப்புக்கான தொழில்நுட்ப தீர்வுகளை வழங்கும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும். கட்டணக்கொடுப்பனவுகள், P2P இடமாற்றங்கள், QR கொடுப்பனவுகள் போன்ற நிதிப் பரிவர்த்தனைகளைச் செய்வதற்கான விரைவான, எளிதான மற்றும் நம்பகமான அமைப்பை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறார்கள்.

256 வாடிக்கையாளர் நிலையங்களுடன், HNB இலங்கையின் மிகப் பெரிய, தொழில்நுட்ப ரீதியாக புத்தாக்கமான தனியார் வங்கிகளில் ஒன்றாகும். பேண்தகைமை, நல்லாட்சி மற்றும் கூட்டுத்தாபனத்தின் சிறப்பம்சங்கள் ஆகியவற்றில் அதன் பாரம்பரியத்தை ஒருங்கிணைத்து, இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் சிறந்த கார்ப்பரேட் பிரஜைகள் விருது வழங்கும் நிகழ்வில் HNB 2022ஆம் ஆண்டிற்கான சிறந்த கூட்டாண்மை குடிமகனாக முடிசூட்டப்பட்டது.

சிறந்த 10 கார்ப்பரேட் குடிமக்களுக்கான பட்டியலில் இடம்பிடித்தது மற்றும் நிதித் துறையாளர் ஆளுமைப் பிரிவு மற்றும் நிலைத்தன்மை சாம்பியன் பட்டம் பெற்றுள்ளது உட்பட 4 கூடுதல் பாராட்டுகளை வங்கி மேலும் பெற்றுள்ளது. மேலும், 2022 ஆம் ஆண்டு தொடர்ந்து ஆறாவது ஆண்டாக இங்கிலாந்தை தளமாகக் கொண்ட புகழ்பெற்ற வங்கியாளர் சஞ்சிகையால் தொகுக்கப்பட்ட உலகின் தலைசிறந்த 1,000 வங்கிகளின் பட்டியலில் HNB இடம்பிடித்துள்ளது, மேலும், ஏசியன் பேங்கர் இதழால் நடத்தப்பட்ட வாடிக்கையாளர் நிதிச்சேவைகள் 2022 விருது வழங்கும் நிகழ்வில் இலங்கையின் சிறந்த வாடிக்கையாளர் வணிக வங்கியாக கௌரவமான சர்வதேச சிறப்புடன் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுணவுகள் விலை சடுதியாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ்ப்பாணத்தில் கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளன. காலநிலை வேறுபாட்டால் மீனவர்களின் வலைகளில் கடலுணவுகள் அதிக ளவில் பிடிபடாததால் அவற்றின் விலை சூடுபிடித்துக் காணப்படுகின்றன.

நகரை அண்டிய சந்தைகளுக்கு கடலுணவுகள் போதியளவு வந்து சேராததால் அவற்றுக்கு பற்றாக்குறை நிலவி வருவதோடு விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

பாஷையூர், கொட்டடி, குருநகர், நாவாந்துறை மீன் சந்தைகளில் இவ்வாறு கடலுணவுகள் அதிகரித்த விலையில் விற்கப்படுகின்றன. அதன்படி ஒரு கிலோ இறால் 2 ஆயிரம் ரூபாவாகவும் ஒரு கிலோ நண்டு ஆயிரத்து 800 ரூபாவாகவும் ஒரு கிலோ கணவாய் ஆயிரத்து 600 ரூபாவாகவும் ஒரு கிலோ மீன் ஆயிரத்து 400 ரூபாவாகவும் ஒரு கிலோ சுறாமீன் 2 ஆயிரம் ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

(எ-14-17)


**கார்/வான் குத்தகைக்குத் தேவை**

தகுந்த பெறுமானம் வழங்கப்படும்.

**T.P: 077 4891 279**

**காணி விற்பனைக்கு**

தாவடி மானிப்பாய் வீதி, தாவடி வடக்கில் 3, 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 255 0807

**SMART SCIENCE CENTRE**

**DAY CLASS**

**பௌதிகவியல்**

By - T.K. KAJAN - B.Sc

077 653 1177

(CS/23351/4,6)

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம்**

யாழ். பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலில் இருந்து சுமார் 350 மீற்றர் தூரத்தில் குமாரசாமி வீதியில் 2 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 247 8360 (CS/49101) 4,6

**மணப்பெண் தேவை**

01. அச்சுவேலி - புத்தூர், இந்து, கௌரவகுடும்பம் (K) 1986, அனுசம். Administration Professional, France Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 25869
02. சுன்னாகம் - உடுவில் இந்து, கௌரவகுலம் (K), 1983, புனர்பூசம், Graduate Network Operation Engineer, USA Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 28442
03. சுன்னாகம் - சாவகச்சேரி , இந்து, கௌரவகுலம் (K), 1996, மிருகசீரிடம், B.Sc Engineering, Australia Citizen, மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 32933
04. உரும்பிராய், இந்து, கௌவரகுலம் (V), 1974, திருவோணம்,B.Sc, Finance Advisor, கனடா சிற்றிசன் மாப்பிள்ளைக்கு பெண்தேவை. பதிவெண் - 23110
05. யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம் (V), 1982, அத்தம், Masters in Electrical Engineering (USA) Divorce, USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 24750
06. Jaffna Town, Romancatholic, கௌரவகுலம் (V), 1984. BBA, International Business Managment, USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 28771
07. மல்லாகம் - உடுவில் , இந்து, கௌரவகுலம் (V), 1984, சுவாதி, B.Sc Masters in Statistics, USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 28963
08. முல்லைத்தீவு , இந்து, குருகுலம், 1981, அத்தம், A/L, Accountant, USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. A/L படித்த பெண் போதுமானது பதிவெண் - 29301
09. காரைநகர், இந்து, கௌரவகுலம் (V), 1986, உத்திராடம், Airspace Engineer, USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 27891
10. மானிப்பாய் - பளை, இந்து, கௌரவகுலம் (V), 1979, கார்த்திகை, Graduate, Canada Citizen Divorce (Nullified) மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 28457

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer

Whatsapp - 077 803 8193

Phone - 077 539 3728

**INFORMATION TECHNOLOGY PARK**

*Jaffna, Srilanka*

*Under the purview of the*

*Ministry of Investment Promotion*

ITP

MPCS Building

127,K.K.S.Road, Jaffna, Srilanka

Office :- 021 222 3641

Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் உயர்தர பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கும் மற்றும் ஏனையவர்களுக்குமான விசேட விரிவுரை வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

SPECIAL BATCH

- *Dip.in Microsoft Office*
- *Dip.in Desktop Publishing*
- *Dip.in Information Technology*
- *Dip.in Computer Programming*

Online Course

- *Dip.in PC Application & Office Management* -06 Month-

Languages

- *VB.net*
- *PHP*
- *C/C++*
- *C#*
- *Java*
- *AotoCAD*

Workshops

- *Internet & e-mail*
- *Webpage Designing & Development* -20 hours-

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

வார நாள் வகுப்புகள் ஆரம்பம் :- 03.03.2023

வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 04.03.2023

*CENTRE FOR INFORMATION TECHNOLOGY*

- Executive Officer -


# மரண அறிவித்தல்



தோற்றம் 19 • 09 • 1948

மறைவு 14 • 02 • 2023

## திருமதி இராசமணி கனகரத்தினம்

மாப்புலவு வீதி வதிரியைப் பிறப்பிடமாகவும், வதிரி மற்றும் கொழும்பு மருதானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி கனகரத்தினம் அவர்கள் 14-02-2023 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கனகரத்தினத்தின் (ஓய்வூதியர், மதுவரித்திணைக்களம்) அன்பு மனைவியும், செல்வமணி, காலஞ்சென்ற ஜெயமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அனுசுயா (ஆசிரியர், யா/ வேலாயுதம் மகாவித்தியாலயம்), ரேணுகா (மருந்தாளர், தேசிய வைத்தியசாலை - கொழும்பு), சரவணபவன் (Quantity Surveyor,UK), கிருஷ்ணபவன் (Engineer, Singapore) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகணேசன் (அதிபர், யா/ கரணவாய் மகா வித்தியாலயம்) சாந்தகுமாரன் (மருந்தாளர், தேசிய கண் வைத்தியசாலை கொழும்பு), மேனகா, சயனுதா ஆகியோரின் பாசமிகு மாமியும், அனந்திகன், சந்தனா, சாதுர்யன், சாதனா, நிவாஷன், சாய்மித்ரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16-02-2023 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு மாப்புலவு வீதி வதிரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகணேசன் - 077 193 8042

சாந்தகுமாரன் - 071 439 7688

தகவல்: குடும்பத்தினர்.

(cr.39241) (2,6)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



## அமரர் கதிர்காமு பசுபதி

(முன்னை நாள் கருணையம்பதி சனசமூக நிலையத் தலைவர்)

கடந்த (17.01.2023) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவர் அமரர் கதிர்காமு பசுபதி அவர்களின் சிவபதப்பேறு குறித்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (16.02.2023) வியாழக் கிழமை காலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து பகல் 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.